SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
16-28 பிப்ரவரி 2026 ₹25
Volume : 46 Issue : 17
www.samarasam.net

எப்ஸ்டீன் கோப்புகள் சொல்லும் செய்தி

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மக்கள் தேர்தல் அறிக்கை

ரமளான் சிறப்புக் கட்டுரைகள்




## நியாயத்திற்குச் சான்று வழங்குங்கள்

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்
தமிழ்நாடு உறுப்பினர்கள் மாநாடு




ஹிதாயா மகளிர் இஸ்லாமியக் கல்லூரி
6ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா

BRINGING HELP and HOPE
SOCIETY FOR BRIGHT FUTURE

VISION 2026®
Creating Partnership with the Needy



பெருநாளை எல்லாருக்கும்
ஒளிமயமானதாக மாற்றுவோம்!

# மகிழ்ச்சிக்கான ஆடை

**வருகின்ற ரமளான் - நோன்புப் பெருநாளில்**
**அனைவரும் மகிழ்ந்திருப்போம்.**

ஏழைக் குழந்தைகள், குடும்பங்களுக்குப் புத்தாடை அளித்து அவர்கள் வாழ்வில் மகிழ்வையும், புன்னகையையும் ஏற்படுத்துவோம். பெருநாளை மகிழ்வாக எல்லாரும் கொண்டாட வழி செய்வோம்!

**மார்ச் 2026**

**₹1250/-**

இரண்டு ஜோடி புதிய ஆடைகள்

**A Contribute your Zakat, Sadaqah, and Ayanat to bring hope, relief, and dignity to the needy.**

DONATE

paytm

**BANK ACCOUNT DETAILS:**
Name: Society for Bright Future
Current A/c No.: 921020057992123
IFSC Code: UTIB0001148
Bank: AXIS BANK, Jasola Vihar
Phone: +91 72900 44603

E-89, 1st floor, Hari Kothi Lane, Abul fazal Enclave, Jamia Nagar, New Delhi-110025
011 41500705, +91 729 000 7485
pr@sbfindia.org www.sbfindia.org




## உள்ளே...


**7** எப்ஸ்டீன் கோப்புகள் சொல்லும் செய்தி
- தலையங்கம்

**8** நியாயத்திற்குச் சான்று வழங்குங்கள்
- ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு உறுப்பினர்கள் மாநாடு

**10** இந்தியாவின் வளர்ச்சியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் பங்களிப்பு
- சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி

**16** ரமளான் அருளப்பட்டது எதற்காக?
- K. ஜலாலுத்தீன்

**20** ஹிதாயா மகளிர் இஸ்லாமியக் கல்லூரி 6ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா
- ஆலிமா சலீனா பாரி

**22** இறையருள் பொழியும் ரமளான்: தூய்மைக்கான அறவழி
- மௌலவி முஹம்மது சித்தீக் மதனி

**32** பசித்திரு!
- அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

**34** ஏழைகளை ஜகாத் மூலம் பணக்காரர்களாக்குங்கள்
- H. அப்துர் ரகீப்

**40** சமய நல்லிணக்கப் பேரவையின் தொடக்கப் புள்ளி
- B. சையத் இப்ராஹீம்

**42** நாவல்: அக்கரைப் பச்சை
- ஜரீனா ஜமால்

**46** கவிதை: சான்று பகரும் நோன்பு
- அ. அப்துல் சத்தார்

**50** மக்கள் தேர்தல் அறிக்கை - பத்திரிகையாளர் சந்திப்பு

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி ● சிறார் உலகம்



ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு*
*விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள்*
*அனுப்ப வேண்டிய முகவரி:*

பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net




## ஹபீபியைக் காண ஆவல் கொள்கிறோம்

இயக்குநர் மீரா கதிரவனின் நேர்காணல் பிரமிப்பாக இருந்தது. ஹபீபியைக் காணும் ஆவல் ஏற்பட்டுவிட்டது. இஸ்லாமிய வாழ்வியலைத் திரையில் கொண்டுவர இயக்குநர் மேற்கொண்ட இலட்சியப் பயணம் பாராட்டுக்குரியது. துணையாக பொறுப்பாசிரியர் அமீனும் நிற்கிறார் என்ற செய்தி மகிழ்வைத் தந்தது. நாங்களும் உடன் இருக்கின்றோம். ஹபீபி மிகப் பெரும் வெற்றி பெற பிரார்த்திக்கின்றேன். வடமாநில இளைஞரை அடித்துச் சித்ரவதை செய்தவர்கள் சிறார்கள் அல்ல. தண்டனைக்குரிய குற்றவாளிகள். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

– ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம்

## நல்லவர்களை எப்படி உருவாக்கப்போகிறோம்?

Dr. K.V.S. ஹபீப் முஹம்மது அவர்கள் கூறியபடி 'மருத்துவர் கோட்டை விட்டால் உயிர், உடல் போய்விடும். ஆசிரியர் கோட்டை விட்டால் தலைமுறையே போய் விடும்' இது பொறுப்பான பணி. வல்லவர்களை உருவாக்க முடிகின்ற நம்மால் நல்லவர்களை உருவாக்க முடியவில்லை இதுதான் நமக்கு முன்னால் உள்ள பிரச்னை. எனவே ஒழுக்கம் சார்ந்து விழுமங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஆசிரியர்களின் பணியை மிகத்தெளிவாகக் கட்டுரையாளார் கூறியிருக்கிறார். அரசும் பொதுமக்களும் அக்கறை கொள்ள வேண்டும்.

– வி.கே.பீம ராஜா, ராஜபாளையம்

## ஆசிரியர்களுக்கு நம்பிக்கை தந்த கட்டுரை

சமரசம் ஜனவரி 16-31 இதழில் Dr. K.V.S. ஹபீப் முஹம்மது அவர்களின் 'ஆசிரியர்களைக் கொண்டாடுவோம்' தொகுப்பு அருமை. ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் ஆசிரியர் தினம் அன்று ஆசிரியர்களை ஏணி என்பார்கள், தோணி என்பார்கள், ஆசிரியர்களைப் போற்றும் கட்டுரைகளும், பேச்சுகளும், பாராட்டுகளும் செய்தித்தாள்கள், வலைதளங்களில் வலம் வரும். மறுநாள் மக்கள் மத்தியில் ஆசிரியர்களா அவர்களுக்கு என்ன ஒன்றாம் தேதியானால் சம்பளம். காலாண்டு, அரையாண்டு, முழு ஆண்டு விடுமுறை என ஆண்டில் பாதி நாள்கள் விடுமுறை, குடும்பத்தோடு சுற்றுலா, வேலைக்குச் செல்லாமலேயே சம்பளம் என்று வசைபாடும் சமூகத்திற்கிடையே சமரசம் இதழில் 'ஆசிரியர்களைக் கொண்டாடுவோம்' கட்டுரை வெளியிட்டு இருப்பது ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சி.

'பல கல்விக்கூடங்களில் 180 நாள்கள் மட்டுமே வேலை நாள். அதிலும் ஆசிரியர்கள் விடுப்புகள் போக 150 நாள்கள் மட்டுமே பணி செய்கிறார்கள்' என்ற தகவல் மிகவும் வருத்தத்தை அளிக்கிறது. ML, CL, RL, EL என்று எந்த விடுப்புமே எடுக்காமல் பல ஆண்டுகளாகப் பணிபுரியும் எங்களைப் போன்ற ஆசிரியர்களுக்கு இது அதிர்ச்சியாகவும் இருந்தது. ஒவ்வொரு ஆண்டிற்கும் அரசு வழிகாட்டுதலின்படி பள்ளி வேலை நாள்கள் 210 நாள்கள். இவை மட்டுமின்றி ஒவ்வொரு மாதமும் பெரும்பாலும் எல்லா சனிக்கிழமைகளிலும், பல பள்ளிகளில் விடுமுறை நாள்களிலும் ஞாயிற்றுக்கிழமையும் சிறப்பு வகுப்புகள் நடைபெறுவதோடு காலை, மாலை, இரவு நேர சிறப்பு வகுப்புகளும் நடைபெற்றுக் கொண்டுதான் உள்ளன.

## தெளிவான சிந்தனை

ஆசிரியர்களைக் கொண்டாடுவோம் என்ற தலைப்பில் மருத்துவர் K.V.S. ஹபீப் முஹம்மது அவர்களுடைய கட்டுரை மிகத் தெளிவான சிந்தனை. ஆசிரியர் கோட்டை விட்டால் தலைமுறையே போய்விடும். இது பொறுப்பான பணி! நிலையான நல்லறம்! அவர்களின் பொறுப்பு வகுப்பறைகளுக்கு அப்பால் நீண்டுள்ளது என்ற கருத்து முற்றிலும் உண்மையே!

– H. ஜமீல் அஹமத்,
ஜுபைல் – சவூதி அரேபியா

## விடுதலையின் அடையாளம்

விடுதலை வேட்கையின் அடையாளமாகத் திகழ்ந்த அபூ உபைதாவை அழித்தாலும் ஃபலஸ்தீன வரலாற்றில் அபூ உபைதாக்கள் தொடர்வார்கள். உலகப் பொருளாதாரமும், இஸ்லாமியப் பொருளாதாரமும் கட்டுரை புதிய கண்ணோட்டம். இஸ்லாமியர்களின் வாழ்வை மட்டுமின்றி கைத்தறி நெசவுத் தொழிலையும் தமிழ்த் திரையுலகில் பதிவு செய்திருக்கும் இயக்குநர் மீரா கதிரவனின் பெரும் முயற்சி பாராட்டுக்குரியது. ஹபீபியைக் கொண்டாடுவோம். வாழ்க்கைப் பாடம் தொடர் அருமை.

– ப.குருசாமி, தேனி

## விடியலை விரும்பும் ரசிகர்களுக்கு விருந்தாய் அமையும் ஹபீபி

இன்றைய சினிமாக்களில் தீவிரவாதி என்றாலே இஸ்லாமியர்கள்தான் என எண்ணும் வகையில் தமிழ்ச் சினிமா போய்க் கொண்டிருக்கிறது. வெட்டு, குத்து, ரத்தம் சொட்டாத கதையம்சமுள்ள படங்களைத் தமிழ்நாட்டில் காணமுடியாதோ எனும் ஐயமெழுவதை மறுப்பதற்கில்லை.

அந்த வகையில் விடியலை விரும்பும்

ஒழுக்க விழுமங்களைப் போதியுங்கள் என்று அதன் முக்கியத்துவத்தை கட்டுரையாளர் கூறியுள்ளார். பள்ளிகளில் M.I. Period (நீதி போதனை) என்று தனிப் பாடவேளை உள்ளது. ஆனால் அதற்குப் புத்தகம் ஏதுமில்லை. எனவே அந்தப் பாடவேளையில் ரிசல்ட்டுக்காகப் போட்டி போட்டுக் கொண்டு பாட ஆசிரியர்கள் பெரும்பாலும் பாடங்களைத் தான் நடத்துகிறார்கள். இந்தப் பழக்கத்தைப் போக்க வேண்டும் என்றால் நீதி போதனைகள் பாடப் புத்தகத்திற்குள்ளேயே வரவேண்டும். நீதி போதனை பாடத்திற்கும் தேர்வு, மதிப்பெண் வந்தால் அதையும் நடத்துவார்கள். மாணவர்கள் படிப்பார்கள்.

இன்று மாணவர்களைக் கண்டிப்பது தடுக்கப்பட்டு எட்டாவது வகுப்பு வரை ஆல் பாஸ் என்ற சூழலில் தேர்ச்சியில் குறை ஏற்பட்டால் பல ஆசிரியர்களின் மத்தியில் நிற்க வைத்து கேள்வி மேல் கேள்விகள் கேட்டு மானத்தை வாங்கும் நிலைக்குப் பயந்து அனைத்து ஆசிரியர்களும் 100 விழுக்காடு தேர்ச்சி நோக்கியே பயணித்துக் கொண்டு உள்ளனர்.

மாணவர்களுக்குச் சீருடை, பாடப்பொருட்கள், காலணிகள், மடிக்கணினி, சைக்கிள், போன்ற இலவசங்கள், கல்வி உதவித்தொகை, மருத்துவப் பரிசோதனைகள், மாத்திரைகள் வழங்குவதோடு தேர்தல் பணி, மக்கள்தொகை கணக்கெடுப்பு என்று கல்விசாரா பணிகளையும் இன்முகத்தோடு மறுக்காமல் பணியாற்றிக் கொண்டிருக்கும் சூழலில் EMIS பதிவேற்றங்களையும் மறுக்காமல் செய்து கொண்டுதான் உள்ளனர்.

இப்பணிகளுக்கு இடையே தொய்வின்றி மேலும் ஆர்வமுடன் பணியாற்றுவதற்கு இது போன்ற கட்டுரைகள் அவ்வப்போது வெளியாகி ஆசிரியர்களுக்கு உற்சாகம் அளிக்கிறது.

– ஐ.மஹபூப்ஜான், ஆடுதுறை

ரசிகர்களுக்கு வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் இயக்குநர் மீரா கதிரவனின் நேர் காணல் படிக்கும் போதே இது வெற்றிப் படமாக அமையும் என்பதைக் கணிப்ப தோடு படத்தை அவசியம் காண வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பையும் தூண்டிவிட்டது. காத்திருக்கிறேன் ஆவலுடன் ஹபீபியைக் காண..!

– சோழா புகழேந்தி, கரியமாணிக்கம்

## நெடுநாள் ஏக்கம் போக்கும் ஹபீபி

இஸ்லாமியர்களின் வாழ்வு தவறாகச் சித்திரிக்கப்படும் சூழலில் உண்மையான வாழ்வியலைச் சினிமாவில் பதிவு செய்ய மாட்டார்களா என்ற நெடுநாள் ஏக்கத்தைப் போக்கும் வண்ணம் ஹபீபி உருவாவது அறிந்து பெரும் மகிழ்ச்சி. முதலீட்டாளர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள், இயக்குநர்கள், தொழில் நுட்ப வல்லுநர்களில் இஸ்லாமி யர்கள் பலர் தமிழ்ச் சினிமாவில் இருந்தும் இதுவரை இஸ்லாமியர்களின் வாழ்வு படமாக்கப்படவில்லை என்பது பெரும் குறையே. அந்தக் குறையைப் போக்கும் வண்ணம் முயற்சி மேற்கொண்ட இயக்குநர் மீரா கதிரவனுக்கு நன்றிகள் பல.

ஆசிரியர் தினக் கட்டுரையில் ஆசிரியப் பணியின் பொறுப்புகளைச் சிறப்பாக எடுத் துரைத்துள்ளீர்கள். நாளைத் தீர்மானிக்கும் காலை கட்டுரை அருமை.

– S.மகுதனன், M.லைலாம்மா, S.அஜிதா, தேனி

## கடிவாளம் அவசியம்

வெனிசுலா விஷயத்தில் ட்ரம்பின் அடாவடித்தனமான நடவடிக்கை அமெரிக் காவின் மீது உலக மக்களின் கடுங்கோபத்தை உண்டாக்கும். அமெரிக்க ஆணவத்திற்குக் கடிவாளம் போடுவது மிக அவசியம்.

படிக்கப் படிக்க பிரமிப்பூட்டும் மனிதப் புனிதர்கள் பற்றிய அரிய தகவல்களை அஷ்ஷெய்க் அகார் முஹம்மது தொகுத்து வழங்கி வருவது மெச்சத்தக்கதாகும்.

கண்ணியவான் சுலைமான் அல்ராஜிஹி யின் ஈடேற்றப் பரந்த மனப்பான்மையில் கடு களவேனும் நாமும் பெற முயல்வோமாக. காஷ்மீர் இளைஞர் உஸைர் மாலிக்கின் அபாரத் திறமை இந்திய இளைஞர் சமுதாயத்திற்கு முன்மாதிரியாக விளங்கிட வாழ்த்துகிறேன்.

– S.A. சபீர் அஹ்மத், துளசேந்திரபுரம்

## உயர்வான கருத்து

போதையின் பாதைக்கான திறவு கோல் ஆட்சியாளர்களிடம் உள்ளதால் இளம் தலைமுறையினர் சீரழிந்து கொண்டிருக் கின்றார்கள். நல்லதைச் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு எழுந்தால் அந்த நாள் நிச்சயம் நன்னாளாக மாறும். திண்டாடும் ஆசிரியர்களைக் கொண்டாடிய விதம் பாராட் டுக்குரியது. குழந்தைகள்தான் உண்மை யான சொத்து என்ற உயர்வான கருத்தை உறுதியாகச் சொல்லிய விதம் அருமை.

– எம்.எஸ். பாரூக், திருப்பாலத்துறை


Press & Registration of Books Act Registration of Newspaper (Chennai) Rules 1956 Form IV (See Rule 8) Statements About Ownership & other Particulars about News Paper.

| | | |
|---|---|---|
| Place of Publication | : | 138, Perambur High Road Chennai -12 |
| Periodicityof Its publication | : | Fortnightly |
| Printer's Name | : | S. Rajan |
| Nationality | : | Indian |
| Address | : | Bharani Offset Printers, 77, Venkatathri Street, Kosapet, Chennai - 12. |
| Publisher's Name | : | H. Abdur Raqeeb |
| Nationality | : | Indian |
| Address | : | 138, Perambur High Road, Chennai -12 |
| Editor's Name | : | H. Abdur Raqeeb |
| Nationality | : | Indian |
| Address | : | 138, Perambur High Road, Chennai -12 |
| Owner's Name(s) | : | Creative Communication Chennai |
| a) Please State the Particulars of individuals or of the firm, joint stock company, Trust, Co-operative society or Association which owns the news paper | : | Trust - represented by its Chairman |

I, H. Abdur Raqeeb here by declare that the Particulars given are true to the best of my knowledge and belief.

(sd) **H. Abdur Raqeeb**
Dated : 28-02-2026 Signature of Publisher

சரம் : 46
மலர் : 17

وَقُولُواْقَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

ஹிஜ்ரி 1447 ஷாபான் 27- ரமளான் 10 ● 2026 பிப்ரவரி 16-28

# எப்ஸ்டீன் கோப்புகள் சொல்லும் செய்தி

2026 ஜனவரி 30ஆம் நாள் அமெரிக்க நீதித்துறை(DOJ) வெளியிட்ட எப்ஸ்டீன் கோப்புகள்(Epstein Files) உலகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. 2025 டிசம்பர் 19ஆம் நாள் 3965 கோப்புகள் தி எப்ஸ்டீன் லைப்ரரி என்ற பெயரில் வெளியானதைத் தொடர்ந்து டிசம்பர் 23இல் 30 ஆயிரம் பக்கங்களைக் கொண்ட 11 ஆயிரம் கோப்புகள் வெளியானது. மீண்டும் ஜனவரி 30இல் 30 இலட்சம் பக்க ஆவணங்கள் 2000 வீடியோக்கள், 1.8 இலட்சம் புகைப்படங்களை அமெரிக்க நீதித்துறை வெளியிட்டு உள்ளது. இதில் மின்னஞ்சல்கள், உரையாடல்கள், விமானப் பயணங்கள் உள்ளிட்ட பல தரவுகள் இணைக்கப்பட்டுள்ளன.

தனித் தீவு, தனி விமானம் மூலம் சிறுமிகளைக் கடத்தி பாலியல் வேட்டையில் ஈடுபட்டு வந்த ஆள் கடத்தல் குற்றவாளியான ஜெஃப்ரி எப்ஸ்டீனுடன் தொடர்பில் இருந்தவர்கள் சாமானியர்களல்ல. வல்லாதிக்க நாட்டின் அதிபர்கள், பிரதமர்கள், உலகப் பணக்காரர்கள், அறிவுஜீவிகள், புகழின் உச்சியில் இருப்பவர்கள் என்ற செய்தி இது பாலியல் குற்றம் தொடர்பானது மட்டுமல்ல ஆயுத வியாபாரம், வெளியுறவு நடவடிக்கைகள், உலக அரசியல், ஆட்சித் தலையீடு, பொருளாதாரச் சூதாட்டம் என்று இந்த வலை இன்னும் விரிந்து கொண்டே செல்வதை உணர்த்துகிறது.

எப்ஸ்டீன் பாம்பீச் இல்லத்தில் 14 வயதான தங்கள் மகளைச் சீரழித்ததாக புளோரிடா காவல் நிலையத்தில் 2005ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட புகாரைத் தொடர்ந்து எப்ஸ்டீன் 2008இல் கைது செய்யப்பட்டு விடுதலையாகி, 2019 ஜூலை 6ஆம் தேதி மீண்டும் கைது செய்யப்பட்டு 2019 ஆகஸ்ட் 10ஆம் தேதி சிறையிலேயே மர்மமான முறையில் உயிரிழந்தார். இந்தக் கொடூரங்களுக்குத் துணை நின்ற கிஸ்லைன் மேக்ஸ்வெல் மீது விசாரணை நடை பெற்று வருகிறது.

எப்ஸ்டீன் கோப்புகளிலிருந்து வெளிவந்துகொண்டே இருக்கும் செய்திகள் நம்மை பெரும் கவலையிலும், வியப்பிலும் ஆழ்த்துகிறது. ஆட்சியாளர்கள், செல்வந்தர்கள், அறிவு ஜீவிகள் என அனைவரையும் ஓர் இடைத்தரகர் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கிறான் என்பது எவ்வளவு கசப்பான செய்தி.

இதயத்தைக் கசக்கிப் பிழியும் இந்தக் கொடூரச் செயல்களில் ஈடுபட்டவர்களும், அதற்குத் துணை நின்றவர்களும் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப் பட வேண்டும். சின்னஞ் சிறு சிறுமிகளுக்குப் பாதுகாப்பில்லாத உலகில் பெண்களுக்கான பாதுகாப்பை எப்படி உறுதி செய்யப் போகிறோம்? மது, போதை, ஆபாசம், பாலியல் வெறி, வரம்புமீறல், அதிகார மமதையின் பிடியிலிருந்து உலகைக் காக்க நம்மிடம் என்ன திட்டம் இருக்கிறது?

ஒழுக்க மாண்புகளைப் போதிப்பதைப் பிற்போக்குத் தனமாகப் பார்ப்பதும் கட்டற்ற சுதந்திரமும் எத்தகையை அவலத்திற்கு இட்டுச் செல்லும் என்பதை இந்த நிகழ்வு நமக்கு உணர்த்துகிறது. இறையச்சமும், இறைவனின் திருமுன் ஒருநாள் நிறுத்தப்பட்டு விசாரிக்கப் பட்டு தண்டனைக்கு ஆளாவோம் என்ற அச்ச உணர்வும், கணக்குக் காட்ட வேண்டும் என்ற கவலையும் இல்லாதவர்களிடம் ஆட்சியும், பணமும், அதிகாரமும், அறிவும் இருந்தால் என்னவாகும் என்பதைத்தான் எப்ஸ்டீன் கோப்புகள் நமக்கு அழுத்தமாகச் சொல்கின்றன. ❀

# நியாயத்திற்குச் சான்று வழங்குங்கள்

**ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு உறுப்பினர்கள் மாநாடு**

**2026** ஜனவரி 24,25,26 ஆகிய மூன்று நாள்கள் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ் மாநில உறுப்பினர்கள் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. இதில் தமிழ்நாடு, புதுச்சேரியிலிருந்து உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியத் தலைவர், பொதுச் செயலாளர், மாநிலத் தலைவர், பொறுப்பாளர்கள் சிறப்புரையாற்றினர்.

திருச்சி அஸ்ஸலாம் அரபிக் கல்லூரி துணை முதல்வர் மௌலவி ஜாஃபர் சாதிக் மன்பயீ திருமறை விரிவுரையுடன் மாநாடு தொடங்கியது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ் மாநிலத் தலைவர் மௌலவி முஹம்மத் ஹனீஃபா மன்பயீ தொடக்க உரையாற்றினார். இந்தியாவின் வளர்ச்சியில் ஜமாஅத்தின் பங்களிப்பு குறித்து அகில இந்தியத் தலைவர் சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி ஆற்றிய உரையை மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் அஜீஸ் லுத்ஃபுல்லாஹ் மொழிபெயர்த்தார். தொடர்ந்து கேள்வி பதில் நிகழ்வும் நடைபெற்றது.

## அறிக்கை ஆய்வு அமர்வு

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பணிகள், களங்கள், மகளிர் அணி குறித்து மாநில அமைப்புச் செயலாளர் K.ஜலாலுத்தீன், மாநிலத் துணைத்தலைவர்கள் யூசுஃப் பாஷா, I.ஜலாலுத்தீன், மாநில மகளிர் அணிச் செய லாளர் ஃபாத்திமா ஆகியோர் விளக்கினர்.

## சிறப்புரைகள்

வலுவான இயக்கத்திற்கு வலிமையான உறுப்பினர்களின் அவசியம் குறித்து அகில இந்திய பொதுச் செயலாளர் ஆரிஃப் அலீ மலையாளத்தில் ஆற்றிய உரையை ஆசிரியர் சலீம் தமிழில் மொழிபெயர்த்தார். வாசிப்பு குறித்து டாக்டர் முஹையதீனும், இயக்க முன்னோடிகள் குறித்து அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்வும், இயக்கமும் குடும்பமும் என்ற தலைப்பில் சென்னை மாநகரத் தலைவர் அதாவுல்லாஹ்வும், குர்ஆன் ஏற்படுத்திய மாற்றங்களை கோவை பெரு நகரத் தலைவர் உமர் ஃபாரூக்கும், ஃபிக் ஹுஸ் ஸீரா என்ற வரலாற்றுரையை திருச்சி



அஸ்ஸலாம் அராபிக் கல்லூரி பேராசிரியர் மௌலவி நூஹ் மஹ்ழரியும், உளத்தூய்மை என்ற தலைப்பில் மௌலவி முஹம்மத் இஸ்மாயீல் இம்தாதியும் சிறப்புரை நிகழ்த்தினர்.




## தாக்கம் ஏற்படுத்திய கிளைகள்

சமுதாயத்தில், சமய நல்லிணக்கப் பணிகளில், மகளிர் மத்தியில் மாற்றங்களை ஏற்படுத்திய கிளைகள் குறித்த கருத்தரங்க நிகழ்வில் எண்ணூர் கிளைத் தலைவர் மஹபூப் பாஷா, மன்னார்குடி கிளைத் தலைவர் மன்சூர், புரைசைவாக்கம் கிளைத் தலைவர் ஹாஷிம் பாஷா, திருப்பத்தூர் கிளைத் தலைவர் மௌலவி சமியுல்லாஹ் உமரி, கோவை மத்திய கிளைத் தலைவர் பீர் முஹம்மது, துவரங்குறிச்சி கிளைத் தலைவி ரிள்வானா ஆகியோர் கருத்துரை வழங்க முன்னாள் மாநிலத் தலைவர் ஷப்பீர் அஹமத் தலைமையேற்று நிகழ்வை நடத்தி கருத்துரை வழங்கினார்.





## கருத்தரங்கங்கள்

தமிழ்நாட்டுச் சூழலில் அழைப்புப் பணி, முஸ்லிம் சமுதாயமும் ஜமாஅத்தின் பங்களிப்பும் குறித்த கருத்தரங்க அமர்வுகள் நடைபெற்றன. இதில் வி.எஸ்.முஹம்மத் அமீன், P.முஹம்மத் யூசுஃப், S.N. சிக்கந்தர், முனைவர் ஹஜ் முகையதீன் ஆகியோர் கலந்து கருத்துரை வழங்கினர்.

மாநிலத் தலைவரின் நிறைவுரையுடன் மூன்று நாள் மாநாடு நிறைவு பெற்றது.




## நிகழ்ச்சி ஏற்பாடுகள்

மாநாட்டிற்கான அரங்கு அமைப்பு, காட்சிப் பதிவுகள், உணவு ஏற்பாடு, தங்கும் வசதிகள், தொழுகைக்கான ஏற்பாடுகள் என ஒவ்வொன்றையும் கோவை மாநகரத் தலைவர் P.S.உமர் ஃபாரூக் தலைமையிலான குழு மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.



## கவி ராத்திரி

இரண்டு நாள் இரவுகளிலும் தமிழ், உருது மொழிகளில் இலக்கிய அமர்வு நடைபெற்றது. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ் தலைமை தாங்கிய இலக்கிய அமர்வுகளில் நம்ம வாசல் சையத் இப்ராஹீம், ஃபைசல், ரஃபீ அஹமது, ஹாமீம் நதீம், இர்ஷத் கான் உமரி, வி.எஸ்.முஹம்மத் அமீன் உள்ளிட்ட பலரும் கவிதைகள், பாடல்கள் பாடி இலக்கிய விருந்தளித்தனர்.



## மக்கள் தேர்தல் அறிக்கை, ராபித்தா மின்னிதழ் வெளியீடு

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தயாரித்த மக்கள் தேர்தல் அறிக்கையும், ஜமாஅத்தின் அறிஞர் பிரிவான ராபிதத்துல் உலமா தயாரித்த ராபித்தா மின் இதழும் இந்த மாநாட்டில் வெளியிடப்பட்டன.



# இந்தியாவின் வளர்ச்சியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் பங்களிப்பு

**JIH உறுப்பினர்கள் மாநாட்டில் அகில இந்தியத் தலைவர்**
**சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி** ஆற்றிய உரை

நம் நாட்டின் பிரச்னைகள் நெருக்கடிகள் என்ன? அந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் பங்களிப்பு என்ன? இனி வரும் காலங்களில் நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதை விரிவாக எடுத்துரைக்க விரும்புகின்றேன். இந்த நாட்டில் எத்தனையோ பிரச்னைகள் இருந்தாலும் அவற்றில் ஆறு பெரும் பிரச்னைகளை முதன்மைப்படுத்துகிறேன்.



### 1. முரண்பாடுகள்

முற்போக்குச் சிந்தனை கொண்ட நல்லுள்ளங்களும் இந்த நாட்டில் இருக்கின்றார்கள். அதே சமயத்திலே பிற்போக்குத்தனமான சிந்தனை, நடத்தை கொண்டவர்களும் இருக்கின்றார்கள். இது ஒரு முரண்பாடு. நம் நாடு பல சாதனைகளைச் செய்து வருகிறது. வளர்ந்து வரும் நாடாகவும் நம் நாடு திகழ்கிறது. அதே வேளையில் மிகவும் பின்தங்கிய நாடுகளை விட நாம் சில விவகாரங்களில் பின்தங்கி இருக்கின்றோம். இது ஒரு முரண்பாடு. உலகத்திலே மிகப்பெரும் பணக்காரார்களுடைய பட்டியலை எடுத்துக்கொண்டால் அதிலே இந்தியர்கள் மிக அதிகளவில் இருக்கின்றார்கள். அதே சமயத்திலே நம்முடைய நாட்டிலே பரம ஏழைகளாக இருக்கக்கூடியவர்களும் இங்கே இருக்கின்றார்கள்.

இங்கே சில மாநிலங்கள் சில சமூகக் குழுக்கள் தங்களுடைய தனிமனித வருமானம், தனிமனித முன்னேற்றத்திலும் மிகப்பெரும் அளவிலே ஓங்கி நிற்கின்றார்கள். ஆனால் சில மாநிலங்களுடைய நிலைமை ஆப்பிரிக்க நாடுகளை விடவும், உள்நாட்டுப் போரில் திணறிக் கொண்டிருக்கின்ற நாடுகளை விடவும் மோசமாக இருக்கின்றது. வளர்ச்சியில் மிகப்பெரும் இடைவெளி உள்ளது. நாடு வளர்ச்சி அடைந்திருக்கின்றது. ஆனால் இடைவெளி மிக அதிகமாக இருக்கின்றது.

### 2. அணிதிரட்டல்கள், பிரிவுகள், பிளவுகள்

இது நம் நாட்டிலே இன்று மிகப்பெரும் தலையாய நெருக்கடியாக நிற்கின்றது. மதத்தின் அடிப்படையிலே மக்களைக் கூறு போட்டு பீதியைக் கிளப்பி வெறுப்பை உற்பத்தி செய்து அரசியல் ஆதாயம் தேடுவதை ஒரு வெற்றிகரமான உத்தியாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். வேறு எங்குமே இந்த மாதிரியான நிலைமையை நாம் பார்க்க முடியாது. அரசியலிலே வெற்றி அடைய வேண்டும் என்றால் பயத்தைக் கிளப்பு! அச்சத்தை ஏற்படுத்து! வெறுப்பைக் கிளப்பு! வெறுப்பின் அடிப்படையிலே அணி திரட்டல்கள் செய்து அரசியல் ஆதாயம் தேடு! என்ற நிலையை இன்று பார்க்க முடிகிறது. இன்று நீதியை விட அடையாளம் முக்கியமாகப் போய்விட்டது. சரியா தவறா என்று பார்க்க மாட்டார்கள். யார் என்று பார்ப்பார்கள். இது எவ்வளவு பெரிய வீழ்ச்சி.

### 3. வெகுமக்கள் அரசியல் (Populism)

வெகு மக்கள் ரசனைக்கு உட்பட்டு கொள்கைகளை வகுக்கின்ற, மாற்றிக் கொள்கின்ற ஓர் உத்தி. ஜனநாயகத்துக்கு ஆபத்து என்று சொன்னால் அது எதேச்ச திகாரம் என்றார்கள். ராணுவப் புரட்சிதான் ஜனநாயகத்துக்கு உலை வைக்கக்கூடிய பேராபத்தாக மக்கள் நினைத்தார்கள். நம்மு டைய நாடு அதிலிருந்தது பாதுகாப்பாக இருந்தது. ஆனால் இன்று பாப்புலிசம் என்கின்ற வகையிலே இங்கே ஒரு மிகப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. என்ன கொள்கைகள் மக்களுக்கு நலன் பயக்கும் என்பது குறித்துப் பேச மாட்டார்கள். மாறாக மக்களுடைய உணர்வுகளை மையப்படுத்தி எல்லாவற்றையும் ஆட்டிப்படைக்கின்ற இந்த பாப்புலிச உத்தி ஜனநாயகத்திற்கு உலை வைக்கக் கூடியதாக இருக்கிறது.

### 4. சுரண்டப்படும் பெண்கள்

பெண்கள் நம்முடைய நாட்டிலே இரண்டு வகைகளிலும் சுரண்டப்படுகின்றார்கள். ஒன்று பாரம்பரியமான முறையில், ஆணா திக்க சிந்தனைப் போக்குகளின் அடிப் படையிலே பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள், வேலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். தலித்கள், ஆதிவாசி, கிராமத்து, நகரத்துப் பெண்கள் எல்லோருமே இந்தப் பாரம் பரியக் கூண்டுக்குள்ளே அடைக்கப்பட்டு சுரண்டப்படுகின்றார்கள். மற்றொரு பக்கம் நவீன சிந்தனையின் அடிப்படையிலே, விற் பனைப் பொருளாகப் பார்க்கின்ற சிந்தனை யின் அடிப்படையிலே அவர்கள் வேட்டை யாடப்படுகிறார்கள், நசுக்கப்படுகின்றார்கள்.

### 5. மடைமாற்றப்படும் இளைஞர்கள்

நம்முடைய நாட்டிலே மிகப் பெரும் எண்ணிக்கையில் இளைஞர்கள் இருக் கின்றார்கள். இந்த இளைய சக்தி நமக்கு விலை மதிப்பற்ற ஒரு சொத்தாக இருக்க வேண்டும். இந்த நாட்டினுடைய வளர்ச் சிக்கும் முன்னேற்றத்துக்கும் செழிப்பிற்கும் மிகப்பெரும் பங்களிக்கக் கூடியவர்களாக இளைஞர்கள் இருக்க வேண்டும். ஆனால் இளைஞர்கள் வெறுப்புக்கு இரையாக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள், பிரிவுச் சிந்த னைகளிலே அடிவாங்கிக் கொண்டிருக்கின் றார்கள். சமூக வலைதளங்களிலே அவர்களு டைய சிந்தனைகள் மழுங்கடிக்கப்படுகின்றன. அவர்களிடம் வெறுப்பு பற்ற வைக்கப்படு கின்றது. ஆற்றலுக்குப் பதில் இளைஞர்கள் ஒரு பேரழிவாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

### 6. சரியும் ஒழுக்கம்

நம்முடைய நாட்டிலே சுரத்தில்லாமல் செயல்படுகின்ற போக்கு நீடித்திருக்கின்றது. மெத்தப் படித்தவர்களும் சரி மிக உயர்ந்த நிலையில் இருப்பவர்களும் சரி அவர்களும் இதற்கு ஆளாகிக் கொண்டிருப்பது ஒரு மிகப்பெரும் முரண்பாடு. இதனை மிடில் கிளாஸ் மொராலிட்டி என்று சொல்வோம்.

நடுத்தர மக்களுடைய ஒழுக்க, தார்மிகப் பண்புகளைக் கொண்ட அந்த மனசாட்சி சமூகத்தை, நாட்டை நெறிப்படுத்தக்கூடிய அளவுக்கு ஆற்றல் வாய்ந்ததாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இன்று அந்தக் கூட்டு மிடில் கிளாஸ் மொராலிட்டியும் நயவஞ்ச கத்துக்கு ஆளாகி இருக்கிறது. தவறுகள் கொண்டாடப்படுகின்றன. ஆபாசப் படங்கள் சகித்துக் கொள்ளப்படுகிறது. இளைஞர்கள் மிக எளிதாகப் பாலியல் வக்கிரங்களின் பக்கம் தள்ளப்படுகின்றார்கள்.

இதைப் பார்த்து கூட்டு மனசாட்சி சிலிர்த்து எழுவதில்லை. ஒரு பக்கம் மது மிக ஆதிக்கம் செலுத்தி மதுபானக் கூடங்களின் கலாச் சாரம் உச்சத்தில் இருக்கின்றது. ஆனால் அதை விட்டுவிட மனமின்றி இந்தக் கூட்டு மனசாட்சி தட்டுத் தடுமாறி திணறிக்கொண்டிருக்கின்றது.

இவை எல்லாமே நாட்டு வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக, தடையாக இருக்கின்றன. வளர்ச்சிக்கான சாத்தியங்களை இவை உலை வைக்கக் கூடியதாக இருக்கின்றது.

### ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் பங்களிப்பு

இந்த நாடு சந்திக்கக்கூடிய சமூக, பொரு ளாதார, அரசியல் பிரச்னைகள் அனைத்துக் குமே தீர்வு இஸ்லாத்தில் இருக்கிறது என்பதை

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தொடர்ந்து சொல்லி வருகிறது. நாம் பிரச்னைகளை மட்டும் பேசுவதில்லை. பிரச்னைகளுக்கான தீர்வையும் சொல்லி வருகிறோம். கொள்கை விற்பன்னர்களிடம் அந்தத் தீர்வுகளை எடுத்து வைக்கின்றோம். கருத்து உருவாக்குவதற்குத் தொடர்ந்து முயற்சித்து வருகிறோம். இது ஜமாஅத்தின் மிகப்பெரிய பங்களிப்பு.

இந்த நாட்டின் ஆக்கப்பூர்வமான வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் நமக்குப் பொறுப்பு இருக்கிறது. பூமியிலே மனிதனை இறைவன் பிரதிநிதியாக்கி இருக்கிறான். அதனுடைய தாத்பரியம் இதுதான். இந்த உலகத்தின் வளர்ச்சிக்கு, இந்த நாட்டு மக்களுடைய முன்னேற்றத்திற்கு என்னுடைய பங்களிப்பைச் செய்வது என் மீது கடமை. இதற்காகத் தொடர்ந்து ஜமாஅத் முயற்சித்து வந்திருக்கின்றது.

நடத்தையை மையமாகக் கொண்ட நீதியையும் கண்ணியத்தையும் சார்ந்த வளர்ச்சிதான் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் வளர்ச்சிக்கான பார்வை. வளர்ச்சி வளர்ச்சிக்காக இருப்பது என்பது புற்றுநோய்க்கான அடையாளம் என்று சொல்வார்கள். புற்றுக் கிருமிகள் வளர்ந்து கொண்டே போகக் கூடியது.

வளர்ச்சி என்றால் வெறும் வளர்ச்சி அல்ல. மாறாக உண்மையான வளர்ச்சி என்று சொன்னால் நீதி சார்ந்த, மாண்பு சார்ந்த, மதிப்பு சார்ந்த, நல்ல நடத்தை சார்ந்த, விழுமம் சார்ந்த வளர்ச்சி. இந்த வளர்ச்சி நீதியின் அடிப்படையில் ஏற்பட வேண்டும் என்று ஜமாஅத் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தத் திசையின் பக்கம் மக்களுடைய கவனத்தை ஈர்ப்பது, வளர்ச்சிக்கான இந்தச் சித்திரத்தைத் தெளிவுபடுத்துவது, எது வளர்ச்சி என்பதைப் பற்றிய ஒரு தெளிவை ஏற்படுத்துவது ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் மிகப் பெரும் பங்களிப்பாக இருக்கின்றது.

இந்த நாட்டிலே தலித்களுடைய கண்ணியம் எப்படிக் குலைக்கப்படுகிறது ஆதிவாசிகளுடைய கண்ணியம் எப்படி மறுக்கப்படுகிறது, ஏழை எளிய மக்களுடைய கண்ணியம் எப்படிப் பந்தாடப்படுகின்றது? ஆனால் இவற்றை எல்லாம் ஒருங்கே கொண்டு ஏழைகளின் கண்ணியம், தலித்களின் கண்ணியம், ஆதிவாசிகளின் கண்ணியம் இவற்றை எல்லாம் மீட்டெடுக்கின்ற வகையிலே, உறுதிப்படுத்துகின்ற வகையிலே வளர்ச்சி இருக்க வேண்டும் என்கின்ற ஒரு பரந்த பார்வையை ஜமாஅத் முன்வைக்கின்றது. நீதியும் கண்ணியமும் சார்ந்த வளர்ச்சிதான் நம்முடைய வளர்ச்சிக்கான மாடல்.

வளர்ச்சிக்கான கனிகள் எல்லோருக்குமே போய்ச் சேர வேண்டும். வளர்ச்சியின் பலன்கள் எல்லாத் தரப்பு மக்களுக்கும் போய்ச் சேர வேண்டும். ஆனால் இன்றைய நிலைமை என்ன? நம்முடைய GDP வளர்ந்து கொண்டே போகிறது. 8% வளர்ச்சி என்று பேசுகின்றோம். ஆனால் அது நீதி சார்ந்ததாக இருக்கிறதா? எல்லா மக்களுக்கும் அந்த வளர்ச்சிக்கான கனிகள் கிடைத்திருக்கின்றவா?

'உங்களுடைய செல்வம் உங்களில் செல்வம் படைத்தவர்களிடம் மட்டும் சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது' என்கிறது திருக்குர்ஆன். இதுதான் பொருளாதாரத்தைக் குறித்த இஸ்லாத்தின் மையப் புள்ளியாக இருக்கின்றது. செல்வம் ஓர் இடத்திலே குவிந்திருக்கக் கூடாது. உங்களிடையே சுற்றிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதுதான் இஸ்லாம் முன்வைக்கும் சிந்தனை. இது தவறும் போது ஏழை பணக்காரன் இடைவெளி மிகப்பெரும் அளவிலே ஏற்படுகிறது.

GDP சரியும் போது, சோசலிசம் என்று எல்லோரையும் சார்ந்த வளர்ச்சியின் பக்கம் சென்றோம் என்றால் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது என்ற விழிம்பிற்குப் போய் விடுகிறார்கள். முதலாளித்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் செயல்படப் போகும்போது ஒரு குறிப்பிட்ட நபர்கள் கையிலே ஒட்டுமொத்த நாட்டின் மிகப் பெரும் செல்வம் குவிந்து விடுகிறது.

இஸ்லாம் இந்த இரண்டு விழிம்புகளுக்கும் இடையே நடுநிலைமையான ஒரு ராஜபாட்டையை நமக்கு முன்னால் வைக்

கின்றது. செல்வம் உற்பத்தி செய்யப்படவும் வேண்டும், அது எல்லோருக்கும் போய்ச் சேரவும் வேண்டும், பங்கிடப்படவும் வேண்டும். இந்த விஷயத்திலே ஜமாஅத்தின் பங்களிப்பு என்னவென்று சொன்னால் ஒவ் வொரு முறையும் பட்ஜெட் தயாரிக்கின்ற போது நாம் ஒரு விரிவான பரிந்துரைகளை அனுப்புகிறோம். GDP விநியோகத்தை எல்லா மக்களுக்கும் போய்ச் சேரக்கூடிய வகை யிலே அதில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்பதை நாம் சுட்டிக்காட்டி வந்திருக்கின் றோம். இஸ்லாம் வழங்குகின்ற இந்தப் பொருளாதாரச் சிந்தனையை சிறந்த எடுத்துக் காட்டுகளுடன் எடுத்துரைக்கின்றோம்.

ஜகாத் சென்டர் இந்தியா, ரிஃபா சேம்பர் ஆஃப் காமர்ஸ் இன்னும் பல்வேறு பைத்துல் மால் நிறுவனங்கள் எல்லாமே இஸ்லா மியப் பொருளாதாரத்தின் ஓர் அழகான சித்திரத்தை மக்களுக்கு முன்னால் நடைமுறை உதாரணமாக எடுத்துரைக்கின்றது. ஒரு சிறப்பான நடைமுறை இங்கே இருக்கிறது. நீதி அடிப்படையில் இருக்கிறது என்பதை ஜமாஅத் தொடர்ந்து எடுத்து வைத்திருக்கிறது.

அணி திரட்டலுக்கு எதிராக மக்கள் கருத்தைச் செதுக்குவதற்கும், அவர்களுடைய சிந்தனைகளை மாற்றி அமைப்பதற்கும் ஜமாஅத் முயல்கிறது. மதம் என்பது ஆக்கபூர்வ மானது, மனிதனுடைய மனதைப் பக்குவப்படுத் தக்கூடியது. மதம் மனிதவாழ்வை நெறிப்படுத் தக்கூடியது, மனிதர்களை ஒன்று சேர்க்கக் கூடியது என்கிற செய்தியை ஜமாஅத் எடுத் துரைக்கின்றது. செக்குலரிசம் என்கின்ற போர் வையிலே மதசார்பின்மை என்ற அந்த ஐரோப் பிய சிந்தனையை அதன் அடிப்படையிலான அரசியல் கலப்பை ஜமாஅத் தொடர்ந்து விமர்ச னம் செய்து வந்திருக்கின்றது.

மதம் என்பது நெறிப்படுத்தக் கூடியது. அது விழுமம் சார்ந்த அரசியலுக்குதான் இட்டுச் செல்லுமே தவிர வெறுப்பையும் வன்மத்தையும் விரோதத்தையும் அது எப்போதும் தூக்கிப் பிடிக்காது. அது கண்ணி யத்தைத்தான் பேசுமே தவிர அவமரியா தையையும் அவமதிப்பையும் பேசாது. மதநம்பிக்கை உள்ளவர்கள் தங்களுடைய பொறுப்பை உணர வேண்டும். வெறுப்பின் அடிப்படையிலே மக்களைக் கூறு போடு கின்ற இந்த அவலத்திலிருந்து நாட்டை விடுவிக்க வேண்டும் என்பதிலே ஜமாஅத் முனைப்புடன் செயலாற்றி வந்திருக்கின்றது

இதற்காக ஆன்மிகத் தலைவர்களைச் சந்தித்து உரையாடி வருகிறோம். வெவ்வேறு ஆன்மிக வழிகாட்டிகளிடம் பேசி இருக் கின்றோம். அதனுடைய ஒரு செயல்பாட்டு வடிவம்தான் தார்மிக் ஜன்மோர்சா என்கின்ற ஓர் மத நல்லிணக்க அமைப்பு. பல்வேறு மதத் தைச் சேர்ந்தவர்களையும் ஒன்று சேர்க்கின்ற வேலையிலும் ஜமாஅத் ஈடுபட்டுள்ளது.

பல்சமய உரையாடல்களை ஜமாஅத் ஏற்படுத்தி வருகிறது. மத நம்பிக்கைகள் கோலோச்சுகின்ற இந்த நாட்டிலே பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள் எல்லோருமே இணக்கமாக இருப்பதற்கு என்னென்ன வழிகள் சாத்தியமோ அந்த வழிகள் அனைத் தையும் ஜமாஅத் மேற்கொண்டிருக்கின்றது. நாடு முழுவதும் சமய நல்லிணக்கப் பேரவை களை (சத்பாவனா மன்ஞ்கள்) ஏற்படுத்தி வருகின்றோம். நாட்டு முன்னேற்றத்திற்கு மதத் தலைவர்கள் எப்படிப்பட்ட பங்களிப்பை வழங்க முடியும் என்பதைக் குறித்தும் ஜமாஅத் அவர்களுக்கு எடுத்துரைத்து வந்திருக்கின்றது.

ஆக்கப்பூர்வமான இளைஞர் சக்தியைச் சிறப்பாகப் பயன்படுத்துவதிலும் ஜமாஅத் தொடக்கத்திலிருந்தே கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. அதன் வெளிப்பாடுகளாக இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பு(SIO) சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு மூலம் இளைஞர்களுடைய சக்தியை செம்மையாகப் பயன்படுத்தி ஆக்கப்பூர்வமான பணிகளிலே அவர்களை ஈடுபடுத்தி வருகின்றோம். இன வாதம், வகுப்புவாதம், வெறுப்பு ஆகியவை மிக உச்சத்தில் இருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்திலே ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஓர் ஆக்கப்பூர்வமான பணிகளுக்கு இளைஞர்களை ஈடுபடுத்துகிறது. இதுவும் ஜமாஅத்தின் ஒரு மிகப்பெரும் பங்களிப்பு.

பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் ஒரு பக்கம் பாரம்பரியத்தின் பிடியிலே சிக்கி இருக்கிறார்கள். இன்னொரு பக்கம் நவீனத் தினுடைய இழுப்பிலே சிக்கிக் கொண்டிருக் கின்றார்கள். இந்த இரண்டு கொடுமையான சிந்தனைகளிலே அவர்கள் சிக்கி சுரண்டப் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்

ஜமாஅத் அவர்களை ஒன்று திரட்டி அவர் களிடம் இயக்கச் சிந்தனையை ஏற்படுத்தி அவர்களைக் களம் இறக்கி அவர்களைச் சுறு சுறுப்பாக, சிறப்பாக இயங்கக் கூடியவர்களாக மாற்றி அவர்கள் மத்தியிலே மிகப்பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இதுவும் ஒரு மிகப்பெரும் பங்களிப்பு. பெண் களுக்கு இன்றைக்குப் பல்வேறு விதங் களிலே அநீதி இழைக்கப்படுகிறது. சமத்துவம் அவர் களுக்கு மறுக்கப்படுகிறது.

அவர்களுக்குச் செல்வம் ஈட்டுகின்ற உரிமை மறுக்கப்படுகிறது. வாரிசு உரிமை மறுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட சூழலிலே அவர்களுடைய உரிமைகளை மீட்டெடுப் பதிலும், சமூகத்தினுடைய நடத்தையை செம் மைப்படுத்துவதிலும் ஜமாஅத் மிகப்பெரும் அளவிலே பணியாற்றி இருக்கின்றது.

### நாம் செய்ய வேண்டியது என்ன?

கதையாடல்களைக் கட்டமைப்பதிலே தலைமை தாங்க(நரேட்டிவ் லீடர்ஷிப்) வேண்டும். புதிய ஒரு சிந்தனையின் பக்கம் மக்களை இழுத்துச் செல்ல வேண்டும். நீதியை நாம் நரேட்டிவாக ஆக்க வேண்டும். நியாயத்தை, ஒரு சமநிலையான போக்கை நாம் மேற்கொள்ள வேண்டும். அதனையே நரேட்டிவாக நாம் கட்டமைக்க வேண்டும்.

இன்றைக்குப் பொருளாதாரக் கொள் கையை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு நீடித்த வளர்ச்சிக்கு இது வித்திடுமா என்றால் நிச்சயமாகக் கிடையாது. நீடித்த வளர்ச் சிக்கு இன்றைய பொருளாதாரக் கொள்கை யால் சாத்தியமே இல்லை. இந்தப் பொரு ளாதாரக் கொள்கை அதானி அம்பானி போன்றவர்களைத் தானே உருவாக்கி வைத் திருக்கின்றது. இன்றைக்கு 8 விழுக்காடு GDP வளர்ச்சி இருந்தாலும் அது எல்லோ ருக்கும் போய்ச் சேர்ந்திருக்கின்றதா? நாம் சான்றுகளின் அடிப்படையிலே, நல்ல முறை யிலே மக்களிடம் எடுத்து வைத்தோம் என்று சொன்னால் ஒரு கதையாடலை நம்மால் உருவாக்க முடியும்.

நாம் நம்முடைய பிரச்னைகளுக்குள், நலன்களுக்குள், நம்முடைய ஆதாயங்களுக் குள் நம்மை நாமே சிறைப்படுத்தி விட்டோம் என்றால் நரேட்டிவை உருவாக்குவதன் பக்கம் நம்முடைய கவனம் செல்லாது. நாட்டு மக்களுக்கு இந்த மாண்புகளின் அடிப்படை யிலான பேசு பொருளை உருவாக்கித் தருகின்ற அந்த நரேட்டிவ்களை அமைக் கின்ற பணியிலே நாம் தொடர்ந்து ஈடுபட வேண்டும்.

நம்முடைய வேலை எதிர்த்துக் கொண்டே இருப்பது அல்ல. நம்முடைய வேலை புதி தாக ஒன்றைப் பரிந்துரைப்பது. புதிதாக ஒன் றைச் சொல்வது. புதிதாக மக்களுக்குத் திசை காட்டுவது. இதைப் பற்றிய போதனைகள், கொள்கைகள் நம்முடைய இலக்கியங்களிலே நம்முடைய புத்தகங்களிலே இருக்கின்றது. நரேட்டிவ் பாலிசி, அதனுடைய திசையைக் கட்டமைக்க வேண்டும்.

நாம் தனித்து இருந்துவிடக்கூடாது, தனி மைப்பட்டு விடக்கூடாது. அவர்களோடு உறவாட வேண்டும், பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் ஒரு மாற்றைக் கொடுக்க வேண்டும். நம்மிடம் ஒரு பொருளாதாரப் பார்வை இருக்கிறது. மாற்றுக்கான மாடல் இருக்கிறது என்பதை நாம் எடுத்துச் சொல் வதுதான் நாம் நடத்துகின்ற நிறுவனங்களின் வேலையாகவும் இருக்கிறது. இவையெல் லாம் நீதியினால் உந்தப்பட்ட வளர்ச்சியாக இருக்கும்.

அவர்களிடம் சிந்தனைகளைக் கொடுப் பது மட்டுமல்லாமல் தீர்வுகளையும் நாம் முன் வைப்போம். இதுதான் ஜமாஅத்தி னுடைய ஒரு மிகப்பெரும் பங்களிப்பாக இருக்கிறது.

தமிழில் : T.அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

# இஸ்லாமிக் சென்டர் – வேலூர் (ICV)

*1978ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இஸ்லாத்தை வாழ்வில் நெறியாக ஏற்றுக் கொண்டவர்களுக்காக அனைத்து வசதிகளுடன் கூடிய தனித்துவமான கல்வி நிறுவன மாகும்.*

**நோக்கம்** (VISION) :

*இங்கு கல்வி பயிலும் மாணவர்களை தவ்ஹீத், தக்வாவின் அடிப்படையில் வாழும் ஒரு மாணவராக உருவாக்குவது. அல்லாஹ் படைத்த அனைத்து மனிதர்களும் ஒரே குடும்பம் என்ற உலகளாவிய சகோதரத்துவக் கோட்பாட்டை அங்கீகரித்து சமூகத்தில் நீதி, கருணையை நிலைநாட்ட பாடுபடுபவர்களாக அவர்களை உருவாக்குவது*

**குறிக்கோள்** (MISSION):

1. *குர்ஆன், சுன்னா அடிப்படையில் உண்மையான இஸ்லாமியக் கல்வியை வழங்கி உறுதியான ஈமான், சிறந்த நற்பண்புகளை வளர்த்தல்.*
2. *அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒடுக்குமுறைகளையும் நிராகரித்து, நபி[ஸல்] அவர்கள் போதித்த சகோதரத்துவம், சமத்துவம், நீதி விழுமியங்களை கற்பித்தல்.*
3. *அல்லாஹ்வின் அனைத்து படைப்புகளிடமும் பணிவு, இரக்கம், சேவை உணர்வை வளர்த்தல்.*
4. *இஸ்லாமிய அறிவை தார்மிக ஒழுக்கம், சமூகப் பொறுப்பு, நெறிமுறைகளுடன் ஒருங்கிணைத்தல்.*
5. *அமைதி, ஞானம், மனிதகுலத்தின் மீதான உண்மையான அக்கறையை வெளிப் படுத்தும் இஸ்லாத்தின் தூதுவர்களாக மாணவர்களைத் தயார்படுத்துதல்.*

*உங்களின் ஜகாத், சதக்கா, நன்கொடை பங்களிப்புகள் இந்த நோக்கத்தை மேலும் பலப்படுத்துகின்றன.*

*பரபரப்பான இந்த வாழ்க்கை ஓட்டத்தில் எங்கள் நிறுவனத்தை மறந்து விட வேண்டாம் என்றும் தொடர்ந்து உங்களின் ஆதரவையும் உதவியும் வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.*

**ISLAMIC CENTER VELLORE**
19/4 MADAR SAHIB STREET, R.N.PALAYAM,
VELLORE - 632001 (TN - INDIA)
E-MAIL : icvellore@gmail.com

**BANK:** UNION BANK OF INDIA, VELLORE BRANCH **A/C. NO.** 33300-10100-19006. **IFSC CODE:** UBIN 0533301
**REMITTANCE THROUGH BANK WITH IN INDIA ONLY**
NOTE: PLEASE SMS TO 095001 90520 IF SENT THROUGH BANK TRANSFER AMOUNT NAME & ADDRESS

# ரமளான் அருளப்பட்டது எதற்காக?

● K. ஜலாலுத்தீன்

புனிதமிகு ரமளான் நம்மை வந்தடைந்தது. இம்மாதத்தில் நம்முடைய வாழ்க்கை நடைமுறைகள் (Lifestyle) மாறிவிடும். பள்ளிவாசலில் இருந்து நம்முடைய அலுவலகங்கள், வணிக வளாகங்கள், இல்லங்கள் எல்லாமே ஒரு மாற்றத்துக்கு உள்ளாகும். அது வரவேற்கத்தக்க மாற்றம்தான். நோன்பு அப்படிப்பட்ட ஒரு பண்புப் பயிற்சியை நமக்கு வழங்குகிறது. ஆனால் அந்த நோன்பு எதற்காக ரமளான் மாதத்திலே கடமையாக்கப்பட்டது? அது ஒரு ஆன்மிக விழாக் காலம்.

ஒவ்வொரு ஆண்டும் ரமளானிலே நாம் நோன்பு வைக்கிறோம், பகலிலே பசித்திருக்கிறோம், தாகித்திருக்கிறோம், இச்சைகளை அடக்கிக் கொண்டிருக்கிறோம், இரவிலே வழக்கத்திற்கு மாறாக மணிக்கணக்கிலே விழித்திருந்து வணங்குகிறோம், இன்னும் அதிகமாக தராவீஹ் தொழுகிறோம், தஹஜ்ஜுத் தொழுகிறோம், அதிகம் அதிகமாக குர்ஆன் ஓதுகிறோம், தான தர்மங்களை வழங்குகிறோம். ஆனால் ரமளான் மாதம் முடிந்து ஷவ்வால் மாதம் தொடங்கிவிட்டால் மீண்டும் பழைய நிலைமைக்குத் திரும்பி விடுகிறோம்.

இது எப்படிச் சாத்தியம்? 'நோன்பு ஒரு பள்ளிக்கூடம்' என்று அரபிப் பழமொழி ஒன்று உண்டு. பள்ளிக்கூடத்திற்கு எதற்காக நம் குழந்தைகளை அனுப்புகின்றோம்? அவர்கள் நல்ல கல்வியை, நல்லொழுக்கத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். பார்த்துப் பார்த்து பள்ளிக்கூடத்தில் சேர்ப்போம். ஆனால் ஐந்தாம் வகுப்பு முடிந்த பிறகும் அந்தப் பிள்ளைக்கு ABCD, அ,ஆ தெரியவில்லையென்றால் அந்தப் பள்ளிக்கூடத்தில் நம்முடைய குழந்தை தொடர்ந்து படிக்க விரும்புவோமா? கோளாறு எங்கே என்று ஆராய்வோம். குழந்தையிடத்தில் பிரச்னையா? ஆசிரியரிடத்தில் பிரச்னையா? இல்லை பள்ளிக்கூடத்தில் பிரச்னையா? என்று ஆய்வு செய்வோம்.

நாம் ஒவ்வொருவரும் நமக்கு விவரம் தெரிந்த நாளில் இருந்து பல ஆண்டுகளாக நோன்பு நோற்கின்றோம். அப்படி என்றால், அந்த நோன்பு நம்மிடத்தில் எவ்வளவு பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

'இறைநம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன் இருந்த (நபிமார்களைப் பின்பற்றிய)வர்கள் மீது கடமையாக்கப்பட்டது போல், உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டிருக்கிறது. (அதன் மூலம்) நீங்கள் இறையச்சமுள்ளவர்களாய்த் திகழக்கூடும்' (திருக்குர்ஆன் 2:183)

அந்தத் தக்வா - இறையச்சம் நமக்கு வந்துவிட்டதா? ரமளான் மாதம் முழுவதும் நேர்த்தியாகத் தொழுவது போல மற்ற மாதங்களில் தொழுகின்றோமா?

ரமளானில் பொய் பேசமாட்டோம்; ஏமாற்ற மாட்டோம்; அளவை, நிறுவையில் மோசடி செய்ய மாட்டோம், ஆபாசமான, அருவருக்கத்தக்க காரியங்களைப் பார்க்க மாட்டோம். பிற மாதங்களில் இவற்றைச் செய்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதா?

இந்த ரமளான் நம்மை உண்மையான நாகரிக மனிதர்களாக, பண்பாட்டில் உயர்ந்தவர்களாக, ஒழுக்கத்தில் சிறந்தவர்களாக மாற்ற வேண்டும்.

## குர்ஆனிய நாகரிகம்

உலக வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், எத்தனையோ நாகரிகங்களை நாம் காண்கிறோம். சிந்துச் சமவெளி நாகரிகம், நைல் நதி நாகரிகம், மஞ்சள் ஆறு நாகரிகம், யூபிரடிஸ் நதிக்கரையோர நாகரிகம் - இவ்வாறாக உலகின் பெரும்பாலான நாகரிகங்கள் அனைத்தும் ஆற்றங்கரைகளில் தான் உருவாகியுள்ளன. காரணம் என்ன? ஆற்றங்கரை என்பது வளமும் செழிப்பும் நிறைந்த இடம்; அங்கு மனிதர்கள் வசதியுடனும் வளத்துடனும் வாழ்ந்தார்கள்.

ஆனால் இஸ்லாமிய நாகரிகம் அப்படியல்ல. அது ஆறுகளற்ற, பாலைவனமான அரேபியாவின் மணல் நிலத்திலிருந்து பரவியது. மக்காவிலும் மதீனாவிலும் நதிகள் ஓடவில்லை. ஆயினும், அந்த மணற் பரப்பிலிருந்து உலகத்தை ஒளி ஊட்டிய ஒரு மகத்தான நாகரிகம் உருவானது என்றால், அங்கே ஒரு நதி ஓடியது - அது தண்ணீரின் நதி அல்ல; அது ‘வஹி’ என்ற வேத வெளிப்பாட்டின், இறைவசனங்களின் நதி. அல்லாஹ்வின் அருளாலே நபி(ஸல்) அவர்களின் மூலம் குர்ஆன் எனும் உயிர்நதி இந்த உலகில் ஓடத் தொடங்கியது.

அந்தக் குர்ஆன் நதி, இதுவரை மனித வரலாற்றில் எந்த நாகரிகமும் உருவாக்காத அளவுக்கு உயர்ந்த, ஒழுக்க மிக்க, நீதியுள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்கியது. அந்த நாகரிகத்தின் வாரிசுகளாகத் தான் நாம் இன்று வாழ்கிறோம். அந்த உயிர் நதி இன்றும் ஓடிக்கொண்டே இருக்கிறது. ஆனால் அந்த நதியிலிருந்து நாம் பயன் பெறவில்லை என்றால் இழப்பு அந்த நதிக்கல்ல; இழப்பு அந்த வஹிக்கல்ல; இழப்பு நமக்குத்தான்.

இன்றைக்கு ரமளான் வந்தால் தான் குர்ஆன் நமக்கு நினைவுக்கு வருகிறது. ‘ரமளான் மாதம் எத்தகையதென்றால், அம்மாதத்தில்தான் மனிதர்களுக்கு (முழுமையான) வழிகாட்டியாகவும், மேலும் நேர்வழியின் தெளிவான அறிவுரைகளைக் கொண்டதும், சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டக்கூடியதுமான குர்ஆன் இறக்கியருளப்பட்டது. எனவே இனி உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் முழுவதும் நோன்பு நோற்க வேண்டும்.’ (திருக்குர்ஆன் 2:185)

குர்ஆன் இறக்கப்பட்டதன் காரணமாகத் தான் ரமளானுக்கு இவ்வளவு சிறப்பு. குர்ஆன் என்பது மனிதனை அறியாமையின் இருளிலிருந்து வெளிச்சத்தின் பக்கம் கொண்டு செல்லும் வேதம். நரகத்திலிருந்து காப்பாற்றி, சுவனத்தின் பக்கம் கைப்பிடித்து அழைத்துச் செல்லும் இறைவனின் வழிகாட்டல். ஆனால் அந்தக் குர்ஆனை நாம் ஓதுவதையே ஒரு சடங்காக மாற்றி விட்டோம்.



**மக்காவிலும் மதீனாவிலும் நதிகள் ஓடவில்லை. ஆயினும், அந்த மணற் பரப்பிலிருந்து உலகத்தை ஒளி ஊட்டிய ஒரு மகத்தான நாகரிகம் உருவானது என்றால், அங்கே ஒரு நதி ஓடியது – அது தண்ணீரின் நதி அல்ல; அது ‘வஹி’ என்ற வேத வெளிப்பாட்டின், இறைவசனங்களின் நதி. அல்லாஹ்வின் அருளாலே நபி(ஸல்) அவர்களின் மூலம் குர்ஆன் எனும் உயிர்நதி இந்த உலகில் ஓடத் தொடங்கியது.**

குர்ஆன் மீது உண்மையான நம்பிக்கை இல்லாமல் ஒருவர் முஸ்லிமாக இருக்க முடியாது. ஆனால் அந்த நம்பிக்கை என்பது

பெயரளவிலானதாக இருக்கக்கூடாது. இது அல்லாஹ்வின் வேதம் என்று ஒப்புக் கொண்டால் மட்டும் போதாது.

அலிஃப் - லாம் - மீம் என்று நீங்கள் ஓதினால், ஒவ்வொன்றுக்கும் பத்து நன்மைகள் கிடைக்கும்; மூன்று எழுத்துகளுக்கு முப்பது நன்மைகள் கிடைக்கும். நபி(ஸல்) அவர்கள் இதை அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்த நன்மைகளை மட்டுமே தருவதற்காக அல்லாஹ் குர்ஆனை இறக்கவில்லை.

அல்லாஹ் கூறுகிறான், 'அலிஃப், லாம், றா. (முஹம்மதே!) இது ஒரு வேதமாகும். இதனை உம்மீது நாம் இறக்கியுள்ளோம்; மக்களை, அவர்களுடைய இறைவனின் உதவி கொண்டு இருளிலிருந்து வெளியேற்றி, ஒளியின் பக்கம் நீர் கொண்டு வர வேண்டும் என்பதற்காக!' (திருக்குர்ஆன் 14:1)

எனவே, குர்ஆன் என்ற அந்த உயிர்நதியிலிருந்து நாம் உண்மையான நன்மை பெற வேண்டும் என்றால், அதை விளங்கிக் கொண்டு ஓத வேண்டும். நபிகளாரும், அவர்களின் தோழர்களும் குர்ஆனின் அடிப்படையில் வாழ்ந்தது போல, நாமும் நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

திருக்குர்ஆனை ஓதுவதற்கு நன்மை உண்டு. பொருள் தெரியாமல் ஓதினாலும் நன்மை உண்டு. இந்தச் சிறப்பு வேறு எந்த நூலுக்கும் இல்லை; குர்ஆனுக்கு மட்டுமே உள்ளது. ஆனால் குர்ஆன், அதைவிட அளவற்ற உயர்ந்த நன்மையின் பக்கம் நம்மை அழைத்துச் செல்லத் தயாராக இருக்கிறது. அது அல்லாஹ்வின் மன்னிப்பின் பக்கம் நம்மை வழிநடத்துகிறது. அது நம்மை நேர்மையான, தூய்மையான, இறைவனை நோக்கி வாழும் வாழ்க்கைக்குக் கைப்பிடித்து அழைக்கிறது.

## உயர்ந்த வாழ்க்கைக்கான பயிற்சிக் காலம்

நோன்பின் மூலம், 'அல்லாஹ் நம்மைக் கண்காணிக்கிறான்' என்ற உணர்வு நம் உள்ளத்தில் உருவாகிறது. அந்த உணர்வின் வழியாக, குர்ஆனுடைய வசனங்கள் நம் நினைவில் பதிகின்றன. நற்செயல்கள் பலன் தர வேண்டும் என்றால், அவற்றின் அடிப்படையாக ஈமான் - இறைநம்பிக்கை இருக்க வேண்டும். அந்த இறைநம்பிக்கை என்பது வெறும் சொல்லில் அல்ல; உள்ளத்தில் உறைந்த, வாழ்வில் வெளிப்படும் நம்பிக்கையாக இருக்க வேண்டும்.

இறையச்சம் உடையவர்களுக்கு நோன்பு கடமை; நோன்பு வைத்தால் இறையச்சம் வரும்; இறையச்சம் இருந்தால் ஹிதாயத் - நேர்வழி கிடைக்கும். இவை அனைத்தும் ஒன்றோடொன்று இறைவன் அமைத்துக் கொடுத்த அழகிய சங்கிலித் தொடர்புகள். நாம் பொதுவாக முத்தக்கீன் என்ற சொல்லை, இறையச்சம் உடையவர்கள் என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டுக் கடந்து விடுகிறோம். ஆனால் அச்சம் என்றால் என்ன? பாம்பைப் பார்த்தால் சிலருக்குப் பயம் வரும்; சிலருக்கு பல்லியைப் பார்த்தால் அச்சம் வரும்; சிலர் கரப்பான் பூச்சியைக் கண்டால்கூட நடுங்குவார்கள். ஆனால் அந்த உயிரினங்கள் நம் முன்னிலையில் இல்லாவிட்டால், நாம் பயப்படுவோமா? இல்லை.

ஆனால் நம்மைப் படைத்துப் பரிபாலித்துக் கொண்டிருப்பவனான அல்லாஹ்வை நாம் கண்களால் காண முடியாவிட்டாலும், அல்லாஹ் நம்மைக் காண்கிறான் என்ற உள்ளுணர்வு நம் உள்ளத்தில் இருக்கிறது அல்லவா? அந்த உணர்வுதான் தக்வா - இறையச்சம். அதனை உருவாக்கும் உன்னதமான பயிற்சிதான் நோன்பு.

ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல; ஒவ்வோர் ஆண்டும் ஒரு மாத காலம் தொடர்ச்சியாக இந்தப் பயிற்சி நமக்கு வழங்கப்படுகிறது என்றால், அல்லாஹ் நம்மைக் கண்காணிக்கிறான் என்ற உணர்வு, நம்முள் இயல்பான உள்ளுணர்வாக மாற வேண்டும். இந்தப் பயிற்சியை நாம் பெறவில்லை என்றால், ரமளான் ஒரு வழிபாட்டு மாதமாக அல்லாமல், ஒரு சாதாரண திருவிழாவாக மட்டுமே மாறிவிடும்.

அல்லாஹ் ஹலாலாக அனுமதித்த பல விஷயங்கள் - உணவு, தண்ணீர், தாம்பத்ய இச்சைகள் - அனைத்தும் இயல்பாக அனுமதிக்கப்பட்டவையே.

ஆனால் அதிகாலைத் தொழுகை (சுபுஹ்) பாங்கு முதல் அந்திவேளைத் தொழுகை (மஃக்ரிப்) பாங்கு சொல்லும் வரை, அதே ஹலாலான விஷயங்களையே நாம் துறந்து நிற்கின்றோம். ஏன்? ஒரே காரணம் அல்லாஹ் இந்நேரத்தில் கூடாது என்று சொன்னான். ஹலாலான ஒன்றைக் கூட, அல்லாஹ் தற்காலிகமாகத் தடை செய்ததற்காக, நாம் அதை விட்டுவிடுகிறோம் என்றால், அது அல்லாஹ்வின் கட்டளைக்கு நாம் முழுமையாக அடிபணிகின்றோம் என்பதற்கான சான்று.

ஆனால் அதே அல்லாஹ்தான், தினமும் ஐந்து வேளை தொழுகையை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்கின்றான். ஹலால் - ஹராம் என்று வாழ்க்கையின் ஒவ்வொரு விஷயத்தையும் விளக்கிக் கொடுத்திருக்கிறான். அந்தக் கட்டளைகள் நமக்கு ஏன் நினைவில் நிற்பதில்லை? ரமளானில் மட்டும் அல்லாஹ் நம்மைக் கண்காணிக்கின்றான் என்ற உணர்வு வருகிறது. ஆனால் ரமளான் அல்லாத நாள்களில் அது ஏன் மறைந்து விடுகிறது? காரணம் ஒன்றுதான்: வழிபாடுகள் எதற்காக என்ற அறிவு இல்லை; நினைவூட்டல் இல்லை; தொடர்ச்சியான உணர்வு இல்லை.

எல்லா நேரங்களிலும், அல்லாஹ் நம்மைக் கண்காணிக்கின்றான் என்ற அறிவை வழங்குவதும், அந்த உள்ளுணர்வை உருவாக்குவதும், அந்த இறையச்சத்தை வளர்ப்பதுமே நோன்பின் மிக முக்கியமான, உயர்ந்த இலட்சியமாகும்.

இந்த நோன்பு வெறும் ஒரு சடங்காக மாறிவிடக் கூடாது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘சில நோன்பாளிகள் இருக்கிறார்கள்; அவர்கள் பசி, தாகம் அனுபவித்ததைத்தவிர, வேறு எந்தப் பலனையும் பெறுவதில்லை.’

ஏன் தெரியுமா? அவர்கள் நோன்பு வைத்துக்கொண்டே பொய் பேசுகிறார்கள், தவறான செயல்களில் ஈடுபடுகிறார்கள், தீய பழக்கங்களை விட மறுக்கிறார்கள். அப்படிப்பட்ட நோன்பு எந்த மாற்றத்தையும் உருவாக்குவதில்லை.

நோன்பு என்பது அல்லாஹ்வுக்குப் பலன் தருவதற்கான ஒன்று அல்ல. நாம் பசியோடு இருந்தாலும், தாகத்தோடு இருந்தாலும், இச்சைகளை அடக்கிக்கொண்டாலும், அதனால் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையும் இல்லை. பலன் நமக்குத்தான்.

இந்த ரமளான் மாதத்தில், ஒரு நஃபிலான - உபரியான வணக்கத்தைச் செய்தால், மற்ற மாதங்களில் ஒரு ஃபர்ள் - கடமையைச் செய்ததற்குச் சமமான நன்மையை அல்லாஹ் அளிக்கிறான். ஒரு ஃபர்ளை - கடமையை நிறைவேற்றினால், எழுபது ஃபர்ளுகளை நிறைவேற்றிய நன்மைகளை வழங்குகிறான்.

இந்த ரமளானில் ஒருமுறை முழு குர்ஆனை அரபியோடு சேர்த்து, நமக்குப் புரியும் மொழியில் - தமிழோ, ஆங்கிலமோ, ஹிந்தியோ, உர்துவோ - மொழிபெயர்ப்புடன் படிப்பேன் என்று ஒரு தீர்மானம் எடுங்கள்.

இஃப்தாருடைய நேரத்தில், நோன்பாளியின் துஆ கண்டிப்பாக ஏற்கப்படும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அதேபோல் தஹஜ்ஜுத் நேரம், சஹர் நேரம்- அந்த நேரத்தில் டிவியிலும் யூடியூபிலும் மூழ்கி விடாதீர்கள். ஒரு சொற்பொழிவைப் பின்னால் பார்க்கலாம்; ஆனால் அந்த நேரத்தை இழந்தால், வாழ்நாளில் மீண்டும் அதே நேரம் திரும்பக் கிடைக்காது. குறைந்தபட்சம் சஹருக்கு முன் இரண்டு ரக்அத் தொழுது அல்லாஹ்விடம் அழுது மன்றாடுங்கள்.

ரமளான் என்பது முடங்கிக் கிடக்கும் மாதம் அல்ல. பத்ருப் போர் நடந்தது ரமளானில்தான். மக்கா வெற்றி பெற்றதும் ரமளானில்தான். அது செயலற்ற மாதம் அல்ல; அது செயல் நிறைந்த மாதம்.

இந்த ரமளான், குர்ஆன் எனும் உயிர் நதியிலிருந்து நம் உள்ளத்திற்குள் நேர்வழியைப் பாய்ச்சும் மாதமாக இருக்க வேண்டும். இந்த ரமளான் நமது வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைய வேண்டும். நம்முடைய பலவீனங்களை, தவறுகளை, பிழைகளை நீக்கி உண்மையின் பக்கம், வாய்மையின் பக்கம் நன்மையின் பக்கம் திருப்புவதாக இந்த ரமளான் நம் வாழ்வில் புதுவசந்தம் வீச அருளாளன் அல்லாஹ் அருள்புரிவானாக.




# ஹிதாயா மகளிர் இஸ்லாமியக் கல்லூரி 6ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா

**கோ**வை மாநகரில் இயங்கி வரும் ஹிதாயா மகளிர் இஸ்லாமியக் கல்லூரியின் 6ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா 2026 ஜனவரி 26ஆம்நாள் நடைபெற்றது. ஹிதாயா மாணவி அஸ்மிதா பர்வீன் திருமறை ஓதலுடன் நிகழ்வு தொடங்கியது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் மௌலவி முஹம்மது ஹனீஃபா மன்பயீ தலைமை தாங்கினார்.






ஹிதாயா மாணவிகள் கல்வியின் சிறப்புகளைக் குறித்து ஆங்கிலத்தில் உரையாற்றினர். ஆடம்பரத் திருமணம் குறித்த விழிப்பு உணர்வு நாடகம், ஃபலஸ்தீன் குறித்த நாடகம் மாணவிகளின் அரபி மொழித் திறனை வெளிப்படுத்தும் வகையில் அரபியில் அரங்கேறியது. சரளமான உச்சரிப்பு, பொருள் நிறைந்த வசனங்கள், அரபி மொழியில் மாணவிகள் பெற்றுள்ள தேர்ச்சியை வெளிப் படுத்தியது. மாணவிகளே இயக்கி, பாடி, அமைத்த ஹிதாயா பாடல் அனைவரையும் உற்சாகப் படுத் தியது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியத் தலைவர் சைய்த் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி சிறப்புரையாற்ற ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலச் செயலாளர் S.N. சிக்கந்தர் மொழிபெயர்த் தார். பெண்கள் அறிவிலும், ஒழுக்கத்திலும், சமூக சேவையிலும் முன்னிலை வகிக்க வேண்டிய அவசியத்தைத் தமது உரையில் வலியுறுத்தியதுடன் இது கல்வியின் முடிவு அல்ல தொடக்கம் என்பதை எடுத்துரைத்தார்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்திய பொதுச்செயலாளர் ஆரிஃப் அலீ தமது வாழ்த்துரையில், ‘மனிதன் இறை வனின் பிரதிநிதி. மனிதன் பூவுலகிற்கு வருவதற்கு முன்பே உணவு, குடிநீர், காற்று போன்ற அனைத்து வசதிகளையும் இறைவன் ஏற்பாடு செய்து வைத்தான். சில விஷயங்களை மட்டும் மனிதனிடமிருந்து மறைத்து வைத்தான். மனிதனை பூவுலகின் பிரதிநிதியாக நியமித்து, பகுத்தறிவை அளித்தான். மனிதன் தனது அனுபவங்கள், சிந்தனை, ஆராய்ச்சி மூலம் புதிய கலாச் சாரங்கள், நாகரிகங்கள், கண்டுபிடிப்புகளை உருவாக்கினான். அதையே நாம் அறிவியல் என்றும், அதன் பயன்பாட்டை தொழில் நுட்பம் என்றும் அழைக்கிறோம்.




ஆனால் சில கண்டுபிடிப்புகள் மனித சமுதாயத்திற்கு நன்மை அளிப்பதை விட அழிவை அதிகம் கொண்டு வந்துள்ளது. ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுகுண்டு, பல தலைமுறைகள் கடந்தும் மனிதர்களைப் பாதித்து வருவது இதற்குச் சான்று. இத்த கைய அழிவுகளிலிருந்து மனிதனைக் காக்க, இறைவன் தனது தூதர்களின் மூலம் வேதங்களை வழங்கினான். அதில் இறுதி வேதமே திருக்குர்ஆன். ஒருவர் அறிவியல் கண்ணோட்டத்துடன் குர்ஆனை வாசித் தால் அதற்கான வழிகளை அது காட்டும். ஒருவர் ஏதேனும் ஒரு துறையைக் கற்ற பின் குர்ஆனை வாசித்தால் அந்தத் துறைக் கான ஒழுங்கும், சட்டவியலும், வழிகாட் டலும் கிடைக்கும். இதன் மூலம் மனிதன் கண்டு பிடிப்புகளை அழிவிற்கல்ல, ஆக்கப் பூர்வமான நன்மைக்காகப் பயன்படுத்த முடியும்.

இங்கே பட்டம் பெறும் மாணவிகள் திருக்குர்ஆனை முறையாகக் கற்றவர்கள். இவர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் குர்ஆனைக் கற்றுக் கொடுத்தால், அவர்கள் சிறந்த ஒழுக்கமும், அறிவும் கொண்ட மனிதர் களாக சமுதாய நலனுக்காகச் செயல்படு வார்கள்’ எனக் குறிப்பிட்டார்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை மாநகரத் தலைவர் உமர் ஃபாரூக் நன்றியுரை ஆற்றினார். இந்த நிகழ்வில் மாணவிகள், ஆசிரியர்கள், ஆலிம்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் திரளாகக் கலந்து சிறப்பித்தனர்.

தொகுப்பு : **ஆலிமா சலீனா பாரி**



புனித ரமளான் மாதம்  வெறும் பசியும் தாகமும் கொண்டிருப்பதல்ல; அது மனித ஆன்மாவைச் செதுக்கி, இறைவனை நோக்கிப் பயணிக்கச் செய்கின்றது. அண்ணல் நபி(ஸல்) அவர்களின் வழிமுறையும், உத்தம நபித் தோழர்களின் வாழ்வியலும் இம்மையை வென்று மறுமையை அடைகின்ற வழிகளை நமக்குக் காட்டுகின்றன. அவற்றில் சில இதோ:

### 1. தூய்மையான எண்ணமும் இறையச்சமும்

எந்தவொரு நற்செயலும் அதன் நோக்கத்தைப் பொறுத்தே அமைகிறது. ரமளானின் நோக்கம் என்பது உள்ளத்தில் இறையச்சம், தூய எண்ணங்களை வளர்ப்பதேயாகும். எனவேதான் நமக்கு நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது.

‘நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது நோன்பு கடமை யாக்கப்பட்டது போல், உங்கள் மீதும் கடமையாக்கப்பட்டுள்ளது; அதன் மூலம் நீங்கள் இறையச்சமுடையவர்களாக (தக்வா) ஆகலாம்’ (திருக்குர்ஆன் 2:183).

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘யார் ஈமானோடும் (இறை நம்பிக்கையோடும்), நன்மையை எதிர்பார்த்தும் ரமளான் மாதத்தில் நோன்பு நோற்கிறாரோ, அவரின் முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன’ (புகாரி).

ஆகவே வாழ்நாள் முழுவதும் நமது உள்ளங்களில் இறையச்சம், தூய எண்ணங் களைப் பசுமையாக வைத்திருக்க வேண்டும். இதற்கு நாம் ரமளானில் மேற்கொள்கின்ற வணக்க வழிபாடுகள், அறங்கள் உதவி புரிகின்றன.

### 2. குர்ஆனுடன் ஒரு புனித உறவு

ரமளான் என்பது ‘குர்ஆனின் மாதம்’. வானவர் ஜிப்ரீல்(அலை) அவர்கள் ஒவ்வொரு ரமளான் இரவிலும் நபி(ஸல்) அவர்களிடம் குர்ஆனை ஓதிக்காட்டுவது வழக்கம்.

இது வெறும் வாசிப்பல்ல, வாழ்வை மாற்றும் வாசிப்பு. ஆகவே நாம் இந்த ரமளா னுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். ஓத வேண்டும்.

# இறையருள் பொழியும் ரமளான்: தூய்மைக்கான அறவழி

– மௌலவி முஹம்மது சித்தீக் மதனி
முதல்வர், அஸ்ஸலாம் அரபிக் கல்லூரி, திருச்சி



பொருள் அறிந்து வாசிக்க வேண்டும். வாழ்க்கையில் அதைச் செயல்படுத்த வேண் டும்

### 3. வாரி வழங்கும் வள்ளலாவோம்

நபி(ஸல்) அவர்கள் இயல்பிலேயே கொடைவள்ளல். ரமளான் வந்துவிட்டால் வீசும் காற்றை விட வேகமாகத் தர்மம் செய்ப வர்களாகத் திகழ்ந்தார்கள்.

நபி(ஸல்) அவர்கள் நவின்றார்கள்: ‘நோன்பு துறப்பதற்குத் தேவையான உணவுப் பொருள்களை வழங்குபவருக்கு, நோன்பு நோற்றவருக்குக் கிடைக்கும் நன்மையைப் போன்றே கிடைக்கும்; அதே சமயம் நோன்பாளியின் நன்மையில் எதுவும் குறையாது’ (திர்மிதி).

ஏழைகளின் பசியை உணர்வதே நோன்பின் ரகசியம். அன்னை ஆயிஷா(ரலி) அவர்கள் நோன்பு நோற்றிருக்கும் போது, தன்னிடம் இருந்த ஒரே ஒரு ரொட்டியையும் யாசகம் கேட்டவருக்குக் கொடுத்துவிட்டு, வெறும் தண்ணீரைக் கொண்டு நோன்பு திறந்த வரலாறு நமக்குத் தியாகத்தைக் கற்பிக்கிறது. ஆகவே நாம் இந்த மாதத்தில் ஜகாத், தான தர்மங்கள் அதிகம் செய்ய வேண்டும். உற்றார் உறவினர்கள், ஏழை எளியவர்கள் உள்ளனர். எண்ணற்றவர்கள் கல்வி கற்க ஆசைப்படு கின்றனர். இன்னும் எத்தனையோ தேவை உள்ளவர்கள் உள்ளனர்.

இறைவன் கூறுகின்றான்: ‘தர்மங்கள் (ஜகாத்) வறியவர்களுக்கும், ஏழைகளுக்கும், அதை வசூலிக்கும் பணியாளர்களுக்கும், உள்ளங்கள் ஈர்க்கப்பட வேண்டியவர் களுக்கும், அடிமைகளை விடுவிப்பதற்கும், கடன் பட்டவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையிலும், வழிப்போக்கர்களுக்குமே உரி யவை. இது அல்லாஹ் விதித்த கடமையாகும். அல்லாஹ் நன்கு அறிபவன்; ஞானமிக்கவன்’ (திருக்குர்ஆன் 9:60)

ஏழைகளுக்கு வாரி வழங்குவதற்கு நமது மனங்களை மென்மையாக்கும் மாதம் ரமளான்.

> ‘உணவைத் தவிர்ப்பது எளிது, ஆனால் தீயசொற்களைத் தவிர்ப்பதே உண்மையான நோன்பு.’

### 4. இரவுத் தொழுகையும் இறைத் தொடர்பும்

ரமளானின் இரவுகள் ஆன்மாக்களுக்கு மிகவும் பிடித்தமானது. ‘தராவீஹ்’ ‘தஹஜ்ஜுத்’ தொழுகைகள் மனிதனை இறைவனுக்கு மிக நெருக்கமாகக் கொண்டு செல்கின்றன. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘யார் நம்பிக்கை யுடனும் நன்மையை எதிர்பார்த்தும் ரமளான் இரவில் நின்று வணங்குகிறாரோ, அவரது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்’ (ஸஹீஹ் புகாரி). ஆகவே இரவுகளில் நாம் தொழுகையில் ஈடுபடுவோமாக!

### 5. நாவடக்கமும் நற்பண்பும்

உணவைத் தவிர்ப்பது எளிது, ஆனால் தீயசொற்களைத் தவிர்ப்பதே உண்மையான நோன்பு.

‘யார் பொய் பேசுவதையும், அதன் அடிப்படையில் செயல்படுவதையும் விட்டு விடவில்லையோ, அவர் பசித்திருப்பதிலும் தாகித்திருப்பதிலும் இறைவனுக்கு எந்தத் தேவையும் இல்லை’ (புகாரி).

ஜாபிர் இப்னு அப்துல்லாஹ்(ரலி) கூறி னார்கள்: ‘நீ நோன்பு நோற்றால் உனது செவிகள், கண்கள், நாவு ஆகியவையும் பொய், பாவமான காரியங்களை விட்டும் நோன்பு நோற்கட்டும்’

இந்த ரமளானை நாம் ஒரு சடங்காகப் பார்க்காமல், ஒரு ஆன்மிக மறுமலர்ச்சி யாகக் கொள்ள வேண்டும். நபித்தோழர்கள் ரமளான் முடிந்து ஆறு மாதங்கள் வரை அந்த நோன்பை இறைவன் ஏற்க வேண்டும் என்று பிரார்த்திப்பார்கள். நாமும் இப்போதி லிருந்தே நம் உள்ளங்களைத் தயார் செய் வோம்.

## மதரஸா-யே-இம்தாதியா (பார்வையற்றோர்களுக்காக)

# MADRASA-E-IMDADIYA FOR THE BLIND

No.31, New no.61, Kattakadai Street,
Melvisharam - 632509

அல்ஹம்துலில்லாஹ் 2010-ம் ஆண்டு மக்தப் ஆக தொடங்கிய நமது நிறுவனம் படிபடியாக வளர்ச்சி அடைந்து தற்போது நாழிரா, ஹிப்ழு, ஜும்ரா மற்றும் கிராத் ஆகிய பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. மதரஸாவில் 120 மாணவர்கள் ஓதி வருகின்றனர். (இதில் 40 மாணவர்கள் பார்வையற்றவர்கள்). இதுவரை சுமார் 39 மாணவர்கள் 10-ம் வகுப்பு மற்றும் 13 மாணவர்கள் கல்லூரி பட்டபடிப்பு முடித்துள்ளனர்.

ரஸ்மே உஸ்மானி அடிப்படையில் பிரைலி குர்ஆனை தயார் செய்து இந்திய மற்றும் சர்வதேச அளவில் 1200 பார்வையற்றோருக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஒரு பிரதி பிரைலி குர்ஆன் தயாராவதில் ரூ.2000/- செலவாகிறது.

அல்லாஹ்வின் மாபெரும் கிருபையாலும் மக்களின் நன்கொடையை கொண்டும் மாணவர்களின் தேவைகள் (கல்வி, உறைவிடம், பள்ளி மற்றும் கல்லூரி கட்டணம், உணவு, மருத்துவம், போக்குவரத்து செலவு, உடை போன்றவை) அனைத்தும் மதரஸாவின் மூலம்தான் நிறைவேற்றப்படுகின்றது.

**பிரைலி குர்ஆனின் செலவு ₹2,000**





## TOTAL STUDENTS

| | |
|---|---|
| **100** Boy's Students (Blind's 40) | **150** Girl's Students (Blind's 10) |
| **153** Hafiz Graduates (Blind's 15) | **28** Aalim Graduates (Blind's 09) |

| ஆண்கள் மதரஸாவின் செலவினங்கள் | |
|---|---|
| ஒரு மானவனின் மாதாந்திர செலவு | 5,000 |
| ஒரு மாணவனின் வருடாந்திர செலவு | 60,000 |
| மதரஸாவின் மாதாந்திர செலவு | 9,00,000 |
| மதரஸாவின் வருடாந்திர செலவு | 1,08,00,000 |

**+91-9952120340**

## WAYS TO DONATE

**State Bank of India** — THE BANKER TO EVERY INDIAN

**Name** : Imdadiya Educational and Charitable Trust
**A/C No** : 35612371063 **IFSC** : SBIN0003783
**UPI ID** : imdadiyaeducationalct@sbi

**इंडियन बैंक Indian Bank**

**Name** : Imdadiya Educational and Charitable Trust
**A/C No** : 6288904753 **IFSC** : IDIB000M139
**UPI ID** : imadadiya@indianbnk

## SCAN AND PAY

BHIM | UPI — BHARAT INTERFACE FOR MONEY — UNIFIED PAYMENTS INTERFACE

# மதரஸா-யே-இம்தாதியா தாஃலீமுல் பனாத்

## ஒரு பெண் கல்வி கற்றால், ஒரு தலைமுறையே கல்வி கற்றது போன்றதாகும்



மதரஸா-யே-இம்தாதியா தாஃலீமுல் பனாத், மேல்விஷாரம் பெண்களுக்கு மார்க்கக் கல்வியை வழங்கும் நோக்கில் கடந்த 2012-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ் மதரஸா ஒவ்வொரு ஆண்டும் வளர்ச்சி அடைந்து வருகிறது. 2014-ம் ஆண்டு ஹிப்ழு பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. 2016-17ம் ஆண்டிலிருந்து ஹிப்ழு பிரிவு மாணவிகளுக்காக விடுதி வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டது. 2022-ம் ஆண்டிலிருந்து 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு இலவச தையல் பயிற்சியுடன் நாழிரா பிரிவும், 15 வயதிற்கு மேற்பட்ட மாணவிகளுக்கு உலகக் கல்வியுடன் 3 வருட முபல்லிஹா பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது.

2025-ம் ஆண்டு வரை, 113 மாணவிகள் ஹாபிழா ஆகியுள்ளனர். 80-க்கும் மேற்பட்ட மாணவிகள் நாழிரா ஓதியுள்ளனர் மற்றும் எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் (3 பார்வையற்ற மாணவிகள் உட்பட) தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மாணவிகளின் கல்வி நலனுக்காக தங்கள் ஸதகா, ஜகாத் மற்றும் நன்கொடைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**பெண்கள் மதரஸாவின் செலவினங்கள்**

| | |
|---|---|
| ஒரு மாணவியின் மாதாந்திர செலவு | 5,000 |
| ஒரு மாணவியின் வருடாந்திர செலவு | 60,000 |
| மதரஸாவின் மாதாந்திர செலவு | 3,00,000 |
| மதரஸாவின் வருடாந்திர செலவு | 36,00,000 |

G Pay BUSINESS **+91-9080241203**

**WAYS TO DONATE**

**Name** : Ain Educational and Charitable Trust

**A/C No** : 38940876861 **IFSC** : SBIN0003783

**UPI ID** : aineducationaltrust@sbi

**SCAN AND PAY**

BHIM UPI

*Address :*

*12/15, Appapillai Street,*

*Melvisharam - 632509*

Branch of Madrasa-E-Imdadiya for the Blind, Melvisharam

# கூடாத சித்திரங்கள்

**அந்த ஜின்கள் ஸுலைமானுக்காக அவர் விரும்பியவை அனைத்தையும் - உயர்ந்த மாளிகைகளையும், சிற்பங்களையும்,[20] தடாகத்தையொத்த பெரிய தட்டுக்களையும், இருப்பிடத்தை விட்டகலாத பெரும் அண்டாக்களையும் உருவாக்கிக் கொண்டிருந்தன.[21] தாவூதுடைய வழித் தோன்றல்களே! நன்றி செலுத்தும் வகையில் செயலாற்றுங்கள்.[22] என்னுடைய அடிமைகளில் மிகச் சிலர் தான் நன்றி செலுத்துவோராக இருக்கின்றனர்.**

**● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனம் : 13**

**20.** மூலத்தில் தமாஸீல் என்கிற சொல் ஆளப்பட்டுள்ளது. இது திம்ஸால் என்பதன் பன்மையாகும். ஏதேனுமோர் இயற்கையான பொருளோடு ஒத்த வடிவத்தைக் கொண்டதாய் உருவாக்கப்படுகின்ற எந்தவொரு பொருளையும் (அது ஒரு மனிதனாகவோ, பிராணியாகவோ, ஏதேனுமோர் மரமாகவோ பூவாகவோ ஆறாகவோ அல்லது வேறு ஏதோ உயிரற்ற பொருளாகவோ இருக்கலாம்) சுட்டுவதற்கு அரபி மொழியில் திம்ஸால் என்கிற சொல் ஆளப்படுகின்றது. இறைவனால் படைக்கப்பட்ட ஏதேனுமொரு பொருளைப் போன்று படைக்கப்பட்ட ஒவ்வொரு செயற்கையான பொருளுக்கும் பெயர் தான் திம்ஸால் ஆகும். (லிஸானுல் அரப்). வேறொரு பொருளின் (அது உயிருள்ளதாய் இருந்தாலும் சரி, உயிரற்றதாய் இருந்தாலும் சரி, அதன்) வடிவத்தையொத்த வடிவில் உருவாக்கப்பட்ட சித்திரத்துக்குப் பெயர்தான் திம்ஸால். (தஃப்ஸீர் கஷ்ஷாஃப்).

இந்த அடிப்படையில் பார்க்கின்ற போது சுலைமான்(அலை) அவர்களுக்காக உருவாக்கப்பட்டு வந்த 'திம்ஸால்' திண்ணமாக மனிதர்களின் பிராணிகளின் சித்திரங்களாகவோ அவற்றின் சிலைகளாகவோ இருந்தாக வேண்டும் என்பது கட்டாயமாவதில்லை. அவை சுலைமான்(அலை) அவர்கள் தம்முடைய கட்டிடங்களை அழகுபடுத்திக் கொண்ட மலர்களின் இலைகளின் சித்திரங்களாகவோ, இயற்கைக் காட்சிகளின் சித்திரங்களாகவோ இருப்பதற்குச் சாத்தியமிருக்கின்றது.

சுலைமான்(அலை) அவர்கள் இறைத்தூதர்கள், வானவர்கள் போன்றோரின் சித்திரங்களை உருவாக்கியிருந்தார் என்கிற விரிவுரையாளர்கள் சிலரின் கூற்றுகள் தாம் தவறான கருத்துக்கு அடித்தளமாக அமைந்தன. இந்த விஷயங்களை இவர்கள் பனூ இஸ்ராயீல்களின் அறிவிப்புகளிலிருந்து பெற்றிருந்தார்கள். மேலும் முந்தைய ஷரீஅத்களில் இது போன்ற சித்திரங்களை வரைவது தடை செய்யப்பட்டிருக்கவில்லை என்றும் இதற்கு விளக்கம் அளித்தார்கள்.

ஆனால் இந்த அறிவிப்புகள் குறித்து எந்த ஆராய்ச்சியும் செய்யாமல் இவற்றைப் பதிவு செய்த இந்தப் பெரியோர்கள் மனிதர்களின், பிராணிகளின் உருவங்களையும் சித்திரங்களையும் சிற்பங்களையும் உருவாக்குவது முஹம்மத்(ஸல்) அவர்களின் ஷரீஅத்தில் தடை செய்யப்பட்டிருப்பதைப் போன்றே சுலைமான்(அலை) அவர்கள் எந்த மூஸாவின் ஷரீஅத்தைப் பின்பற்றி வந்தார்களோ அதிலும் ஹராமாக்கப்பட்டிருந்தன என்பதைக் கருத்தில் கொள்ளவில்லை. மேலும் பனூ இஸ்ராயீல்களின் ஒரு குழுவினருக்கு சுலைமான் (அலை) அவர்கள் மீது வெறுப்பும் பகையும் இருந்தது என்பதையும் அதன் காரணமாக அவர்கள் சுலைமான் (அலை) அவர்களின் மீது இணைவைப்பு, சிலை வழிபாடு, சூனியம் செய்தல், விபச்சாரம் உள்ளிட்ட மிக மிகக் கேவலமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி பரப்புரையே

29 ஆம் பக்கம் பார்க்க...

● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

# நோன்பு நோற்றால் போதுமா?

**ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் கூறினார்: 'இறைத்தூதரே! இன்ன பெண்மணி தொழுகையாளியாக, நோன்பாளியாக, பெரும் அளவில் தானதர்மங்கள் செய்பவளாக மக்கள் மத்தியில் புகழ் பெற்றிருக்கின்றாள். என்றாலும் அவளிடம் குறை ஒன்று உள்ளது. அவள் தன்னுடைய நாவால் (சுடுசொற்களால்) தன்னுடைய அண்டை வீட்டாரை மனம் நோகச் செய்துவிடுபவள் ஆவாள்'**

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அந்தப் பெண் நரகவாசி ஆவாள்'.**

**அந்த மனிதர் மேலும் கூறினார்: 'இறைத்தூதரே! இன்ன பெண்மணி தொழுகை, நோன்பு, தானதர்மம் போன்றவற்றில் அதிகமாக ஈடுபாடு கொள்ளாதவளாக, (தானம் செய்தாலும்) வெறுமனே சில பன்னீர்த் துண்டுகளை மட்டுமே தர்மம் செய்பவளாக மக்கள் மத்தியில் பேர் பெற்றிருக்கின்றாள். ஆனால் அவள் தன்னுடைய நாவால் (பேச்சால்) அண்டை வீட்டுக்காரர்களைத் துன்புறுத்துவதில்லை'.**

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அந்தப் பெண் சுவனம் செல்வாள்'.**

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா(ரலி)
நூல் : அஹ்மத், பைஹகி

பொதுவாக தொழுகை, நோன்பு, தானதர்மம் போன்ற வெளிப்படையாகத் தெரிகின்ற, உடலுழைப்பைச் சார்ந்த வழிபாடுகள்தாம் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாய்ப் பார்க்கப்படுகின்றன. அன்றாட வாழ்வின் விவகாரங்கள், ஒழுக்கம், நன்னடத்தை, சமூக ஒழுங்குமுறைகள் போன்றவற்றுக்கு மக்கள் தனி முக்கியத்துவம் எதுவும் கொடுப்பதில்லை.

இந்த நபிமொழியில் தவறான கருத்து ஒன்று முற்றாகக் களையப்பட்டுள்ளது. வணக்கமும் வழிபாடும் இறைவனுக்கு மட்டுமே செய்யப்பட வேண்டும். இறைவனோ எந்தவிதமான தேவையும் அற்றவன். ஒருவர் மற்றவருடனான விவகாரங்களில் நல்லவிதமாக நடந்து கொள்வது மனிதர்களின் உரிமைகளில் அடங்கும். மனிதர்களோ தேவையற்றவர்கள் அல்லர். தேவையுள்ளவர்களாகவும் நம்முடைய அக்கறைக்கும் கவனத்திற்கும் உரியவர்களாகவும் இருக்கிறார்கள்.

இறைவழிபாடு தொடர்பான கடமைகள், வாஜிபான அறங்கள் போன்றவற்றைத் தவறவிடாமல் நிறைவேற்றுகின்ற அதே வேளையில் இறைவனின் அடியார்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள், அவர்களின் உரிமைகள் போன்றவற்றையும் பேணி நடந்து கொள்வதும் மிக மிக அவசியம் ஆகும். இந்த விஷயத்தில் அலட்சியம் காட்டுவது மிகப் பெரும் ஆபத்தில் தள்ளிவிடும்.

இங்கு இன்னொரு விஷயத்தை நல்ல முறையில் விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது நாம் என்னதான் மிகப் பெரும் அளவில் நல்லறங்களிலும் வழிபாடுகளிலும் ஈடுபட்டாலும் நம்முடைய நடத்தையும் ஒழுக்கமும் அவற்றுக்கு இயைந்து போகின்ற வகையில் சீரானவையாய் மிளிர்வதும் அவசியமாகும். எந்த உணர்வுடனும் எண்ணத் தெளிவுடனும் நாம் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுகின்றோமோ அந்த உணர்வும் தெளிவும் நம்முடைய

அன்றாட வாழ்விலும் நடத்தையிலும் பிரதிபலிக்கவில்லை எனில் நம்முடைய அந்த நல்லறங்களுக்கும் வழிபாடுகளுக்கும் எந்த மதிப்பும் இருக்காது.

இதனால்தான் நோன்பாளியாய், தொழுகையாளியாய், தானதர்மங்களில் ஈடுபடுபவளாய் இருந்த நிலையிலும் அந்தப் பெண்ணின் நோன்புகளாலும் தொழுகைகளாலும் தர்மங்களாலும் அவளை நரகத்திலிருந்து காப்பாற்ற முடியவில்லை. அதற்கான ஒரே காரணம் அவளுடைய அன்றாட வாழ்விலும் நடத்தையிலும் அவை பிரதிபலிக்காமல் போனதுதான். இன்னும் சொல்லப் போனால் மனிதனின் நடத்தை, ஒழுக்கம் ஆகியவை அவனுடைய ஒட்டுமொத்த வாழ்வோடு பின்னிப் பிணைந்தவையாய் இருக்கின்றன. வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு கட்டத்திலும் தருணத்திலும் அவனுடைய நடத்தையும் ஒழுக்கமும் சிறப்பானதாய் இருந்தாக வேண்டும்.

ஒருவர் தம்முடைய வாழ்வின் எந்தவொரு துறையிலும் எந்தவிதமான கோணலான நடத்தைக்கோ, களங்கத்திற்கோ இம்மியளவுகூட இடம் தராதவராய், எந்தவொரு தருணத்திலும் வரம்புகளை மீறாதவராய், கொடுமை இழைக்காதவராய், எல்லா விவகாரங்களிலும் (அவை இறைவனுடன் தொடர்புள்ளவையாய் இருந்தாலும் சரி, பிற மனிதர்களுடன் தொடர்புள்ளவையாய் இருந்தாலும் சரி) நீதியுடனும் நியாயத்துடனும் நடப்பவராய் இருந்தால் மட்டுமே அவரை நல்ல நடத்தையைக் கொண்டவர் என அறிவிக்க முடியும்.

அவர் ஒரே சமயத்தில் இறைவனுக்கு விசுவாசம் மிக்க அடியாராகவும் இருப்பார்; இறைவனின் அடியார்களின் நலம் நாடுபவராகவும், அவர்களின் வெற்றியையும் வளத்தையும் விரும்புபவராகவும் ஜொலிப்பார். அதற்கும் மேலாக அவர் எந்தவொரு மனிதருக்கும் கேடு விளைவிப்பவராகவோ, வேதனைப்படுத்துபவராகவோ இருக்க மாட்டார்.

## ரமளானில் மூன்று வகையான பயிற்சிகள்..!

**- டாக்டர் ரஜீயுல் இஸ்லாம் நத்வி**

### சிந்தனைப் பயிற்சி

நம்முடைய அறிவை வளர்த்துக் கொள்வதிலும் சிந்தனையை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும். ரமளானில் நம்மில் பெரும்பாலோர் குர்ஆனை ஓதுவதில் மிக அதிகமாக முனைப்புடன் ஈடுபடுகின்றோம். இது போதாது. இதனையும் தாண்டி குர்ஆனைப் புரிந்துகொள்வதிலும் கவனம் செலுத்தியாக வேண்டும்.

### ஆன்மிகப் பயிற்சி

இறைவனின் நெருக்கத்தை உணர்வதுதான் ஆன்மிகப் பயிற்சி. ரமளான் இதற்கான வாய்ப்பை அளிக்கின்றது. மிக அதிக அளவில் உபரியான தொழுகைளை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் ரமளானில் கிடைக்கின்றன. இறைவனுக்கு விருப்பமான அடியானாக ஆகிவிடுவதற்கு நஃபில் தொழுகைகள் உதவுகின்றன. அதன் பிறகு அடியானின் கைகளும் கால்களும் காதுகளும் கண்களும் இறைவனின் கைகளாய், கால்களாய், காதுகளாய், கண்களாய் ஆகிவிடுகின்றன.

எந்தவொரு செயலையும் அல்லாஹ்வுக்காகச் செய்வது. எதனையும் செய்யாமல் தவிர்த்துக் கொண்டாலும் அல்லாஹ்வுக்காகவே தவிர்த்துக் கொள்வது. இதுதான் தக்வா - இறையச்சம். ரமளானில் இதற்கான பயிற்சியும் நமக்குக் கிடைக்கின்றது.

### உடல் பயிற்சி

மிகையான உணவு, மிகையான தூக்கம் போன்றவற்றிலிருந்து ரமளான் மாத நோன்புகளும் தொழுகைகளும் நம்மை விடுவிக்கின்றன. புகைப் பழக்கம், மிகையான தேநீர் போன்றவற்றிலிருந்தும் ரமளான் நம்மை விடுவிக்கின்றது.

*26 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

நடத்தினார்கள் என்பதையும் அவர்கள் மறந்து விட்டார்கள்.

எனவே பனூ இஸ்ராயீல்களின் அறிவிப்புகளை நம்பி இந்த மாண்பும் மகத்துவமும் மிக்க இறைத்தூதர் தொடர்பாக இறைவனால் அருளப்பட்ட ஷரீஅத் தடுக்கின்ற எந்தவொரு விஷயத்தையும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. மூஸா(அலை) அவர்களுக்குப் பிறகு ஈஸா(அலை) அவர்கள் வரை பனூ இஸ்ராயீல்களிடம் அனுப்பப்பட்ட இறைத் தூதர்கள் அத்தனை பேரும் தவ்ராத்தைத்தான் பின்பற்றினார்கள் என்பதும் அவர்களில் எந்தவொரு இறைத்தூதரும் புதியதாக எந்தவொரு ஷரீஅத் சட்டத்தை (தவ்ராத் சட்டத்தை நீக்குகின்ற சட்டத்தை) கொண்டு வரவில்லை என்பதும் எல்லோரும் அறிந்த உண்மை. இப்போது தவ்ராத்தைப் பார்க்கின்ற போது அதில் மனிதர்களின், பிராணிகளின் உருவங்கள், சித்திரங்கள் ஆகியவை ஹராமாக் கப்பட்டுள்ளன என்கிற சட்டம் மீண்டும் மீண்டும் இடம் பெற்றிருப்பதைப் பார்க்கலாம்:

‘மேலே விண்வெளியில், கீழே மண்ணுலகில், பூமிக்கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம்’ (விடுதலைப் பயணம் 20:4)

‘நீங்கள் உங்களுக்கு எனச் சிலைகளையும் படிமங்களையும் கல்தூண்களையும் உருவாக்கிக் கொள்ள வேண்டாம். வணங்குவதற்கெனக் கற்சிலைகளை நாட்டில் நாட்ட வேண்டாம்.’ (லேவியல் 26:1)

‘நீங்கள் அழிவுக்கு உள்ளாகாதபடி சிலைகளைச் செய்யாதீர்கள். ஆண் அல்லது பெண், நிலத்தின் விலங்குகள் அல்லது வண்ணப் பறவைகள், தரையில் ஊர்வன அல்லது தரைக்குக் கீழே நீரில் வாழும் மீன்கள் என எந்த உருவத்திலும் சிலைகள் செய்யாதீர்கள்’ (இணைச் சட்டம் 4:16-18)

‘ஆண்டவருக்கு அருவருப்பானதும், சிற்பியின் கைவினைப் பொருள்களுமான வார்ப்புச் சிலையையோ செதுக்குச் சிலையையோ செய்து அதனை மறைவான இடத்தில் வைப்பவர் சபிக்கப்படட்டும்’. (இணைச் சட்டம் 27:15)

இந்தத் தெளிவான, திட்டவட்டமான கட்டளைகளுக்குப் பிறகு சுலைமான்(அலை) அவர்கள் ஜின்களைக் கொண்டு இறைத் தூதர்கள், வானவர்கள் போன்றோரின் ஓவியங்களையும் அல்லது சிலைகளையும் உருவாக்கினார் என்கிற கூற்றை எந்த அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடியும்? மேலும் இந்தக் கருத்தை யூதர்களின் பேச்சை நம்பி எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? ஏனெனில் இணை வைப்புச் சமூகங்களைச் சேர்ந்த தம்முடைய மனைவியரின் பேச்சைக் கேட்டு சிலைகளை வழிபடத் தொடங்கிவிட்டார் என்று சுலைமான்(அலை) மீது மிகப் பெரும் அபாண்டத்தைச் சுமத்தியவர்கள் அதே யூதர்கள் அல்லவா? (பார்க்க: 1 அரசர்கள் : 11)

அதே சமயம் ஒட்டுமொத்த விரிவுரையாளர்களும் பனூ இஸ்ராயீல்களின் இந்த அறிவிப்புகளைப் பதிவு செய்து கூடவே இந்தச் செயல் முஹம்மத் நபிகளாரின் ஷரீஅத்தில் ஹராமாகும் என்றும் இதனால் இப்போது சுலைமான்(அலை) அவர்களைப் பின்பற்றி சிலைகளையும் சிற்பங்களையும் ஓவியங்களையும் உருவாக்குவதற்கான சுதந்தரம் இல்லை என்றும் இந்த விவகாரத்தின் உண்மை நிலையைத் தெளிவுபடுத்தி விட்டார்கள். ஆனால் இன்றைய காலத்தில் சிலர் (மேற்கத்தியர்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றி ஓவியத்தையும் சிலைகளை வடித்தலையும் ஹலால் ஆக்கிவிட விரும்புகின்ற சிலர்) மகத்துவம் மிக்க குர்ஆனின் இந்த வசனத்தை தங்களுக்கான சான்றாக எடுத்துரைக்கின்றார்கள். ஓர் இறைத்தூதர் இதனைச் செய்கின்றபோது, வல்லமையும் மாண்பும் நிறைந்த அல்லாஹ்வே அவருடைய அந்தச் செயலைக் குறிப்பிடுகின்ற போது, அது குறித்து தன்னு டைய அதிருப்தி எதனையும் வெளிப் படுத் தாத போது, அது திண்ணமாக ஹலால் தான் என்று இவர்கள் வாதிடுகின்றார்கள்.

இந்த வாதம் இரண்டு காரணங்களால் தவறான வாதமாகும். ஒன்று: குர்ஆனில் ஆளப்

பட்டுள்ள தமாஸில் என்கிற சொல் மனிதர்களின், பிராணிகளின் உருவங்கள் என்கிற திட்டவட்டமான பொருளைத் தருவதில்லை. அதற்கு மாறாக அது உயிரற்ற பொருட்களின் சித்திரங்களுக்கும் பொருந்தும். எனவே இந்தச் சொல்லை மட்டுமே சான்றாக வைத்துக் கொண்டு மனிதர்களின், பிராணிகளின் சித்திரங்களை உருவாக்குவது குர்ஆனின் ஒளியில் ஹலால் ஆகும் என சாதிக்க முடியாது.

இரண்டு: வலுவான சான்றுகளுடன், மீண்டும் மீண்டும் பலமுறை அறிவிக்கப் பட்டுள்ள, மிகப் பெரும் எண்ணிக்கையிலான நபிமொழிகளின் படி உயிருள்ள பொருள்களின் சித்திரங்களை, ஓவியங்களை உருவாக்குவதும், அவற்றை வைத்திருப்பதும் ஹராம் என்று நபிகளார்(ஸல்) திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார்கள். இந்த விவகாரம் தொடர்பாக தெள்ளத் தெளிவாக நிரூபிக்கப் பட்ட நபிகளாரின் அமுத வாக்குகள், முன்னோடி நபித்தோழர்களின் கூற்றுகள் ஆகியவற்றை இங்கே பகிர்கின்றோம்:

**1.** அன்னை ஆயிஷா(ரலி) அறிவிக்கின்றார்; உம்மு ஹபீபா(ரலி), உம்மு ஸல்மா (ரலி) ஆகியோர் அபிசீனியாவில் ஒரு கிறித்தவ தேவாலயத்தைப் பார்த்தார்கள். அதில் ஓவியங்கள், உருவங்கள் இருந்தன. அவற்றைக் குறித்து அவர்கள் நபிகளாரிடம் சொன்ன போது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘அவர்களின் நிலைமை எவ்வாறு இருந்ததெனில் அவர்களில் உத்தமமான, நல்ல மனிதர் எவரேனும் ஒருவர் வாழ்ந்து மரணித்துவிட்டால் அவரது அடக்கத் தலத்தின் மீது வழிபாட்டுத் தலத்தை அவர்கள் அமைத்துவிடுவார்கள். அதில் அந்த நல்ல மனிதர்களின் உருவங்களையும் பதித்து விடுவார்கள். இந்த மக்கள் தாம் மறுமை நாளில் அல்லாஹ்வின் சன்னிதியில் படைப்பினங்களில் மிகவும் கெட்டவர்களாவர்’. (புகாரி-கிதாபுஸ் ஸலாத், முஸ்லிம்-கிதாபுல் மஸாஜித், நஸாயீ-கிதாபுல் மஸாஜித்)

**2.** அபூ ஹுஜைஃபா(ரலி) அறிவிக்கின்றார்: ‘ஓவியங்களையும் சித்திரங்களையும் வரைபவர்கள் மீது நபிகளார்(ஸல்) சபித்திருக்கின்றார்கள்.’ (புகாரி-கிதாபுல் புயூ, கிதாபுல் தலாக், கிதாபுல் லிபாஸ்)

**3.** அபூஸுர்ஆ(ரலி) அறிவிக்கின்றார்: ‘ஒரு முறை நான் அபூஹுரைரா(ரலி) அவர்களுடன் ஒரு வீட்டுக்குள் நுழைந்த போது வீட்டின் மேல் ஓவியர் ஒருவர் சித்திரங்களை வரைந்துகொண்டிருந்ததைப் பார்த்தேன். அதைப் பார்த்ததும், அபூஹுரைரா(ரலி) சொன்னார்: ‘என்னுடைய படைப்புகளைப் போன்று, அதற்கு ஒத்த பொருளை உருவாக்குவதற்காக முயல்கின்றவரை விடக் கொடுமையாளன் யார்? இந்த மக்கள் ஒரு தானிய மணியையோ, ஓர் எறும்பையோ படைத்துக் காட்டட்டுமே’ என்று வல்லோன் அல்லாஹ் சொல்கின்றான் என்று நபிகளார்(ஸல்) சொல்லக் கேட்டிருக்கின்றேன்.’ (புகாரி - கிதாபுல் லிபாஸ், முஸ்னத் அஹ்மத், முஸ்லிம்)

**21.** இதிலிருந்து சுலைமான்(அலை) அவர்களின் இல்லத்தில் மிகப் பெரும் அளவில் விருந்தோம்பல் நடந்து வந்தது என்பது தெரிய வருகின்றது. பெரும் பெரும் தடாகங்களைப் போன்று தட்டுகள் எதற்காக உருவாக்கப்பட்டன எனில் அவற்றில் உணவு வகைகளை வைத்து மக்களுக்குப் பரிமாறுவதற்காகத்தான். அதே போன்று ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான மக்களுக்கான உணவைச் சமைப்பதற்காகத்தான் பெரும் பெரும் அண்டாக்களையும் உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்.

**22.** நன்றியுள்ள அடியார்களைப் போன்று செயல்படுங்கள். ஒருவர் இறைவன் தனக்கு அள்ளி அள்ளித் தந்த அருள்வளங்களுக்கு நாவளவில் நன்றி செலுத்தி விட்டு, அந்த அருள்வளங்களை இறைவனின் விருப்பத்துக்கு மாறாக பயன்படுத்துகின்றார் எனில், அவருடைய அந்த நன்றிகளுக்கு எந்த அர்த்தமும் இல்லை. நாவால் நன்றி செலுத்துவதோடு நின்றுவிடாமல், இறைவன் கொட்டிக் கொடுத்த அருள்வளங்களை இறைவனின் விருப்பங்களுக்கேற்ப உகந்த வேலைகளில் மட்டுமே பயன்படுத்துபவர்தாம் உண்மையான நன்றியுள்ள அடியார் ஆவார்.

*(தொடரும்)*

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ...

المدرسة الجنة ودارالأيتام

Regd. No. : 28/BK IV/15

# அல் ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸா

**தேவாரம் - 625 530. தேனி மாவட்டம்.**

பேரன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)

## அன்பான வேண்டுகோள் ...

தேனி மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வரும் நமது அல் ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸாவில் 50-க்கும் மேற்பட்ட எத்தீம் மற்றும் ஏழை மாணவிகள் ஈருலக நற்கல்வி பயின்று வருகிறார்கள். முழுமையான மார்க்க கல்வியுடன் பள்ளி, கல்லூரிகளிலும் பயின்று வருகிறார்கள். எத்தீம்களைப் பராமரிக்கும் இந்த அறப்பணிக்கு மாதந்தோறும் சுமார் ரூ. 3,00,000/- வரை செலவாகிறது. அவர்களின் கல்விக்கும், மதரஸாவின் பல்வேறு அறப்பணிகளுக்கும் தங்களது ஜகாத்/ஸதகா-வை வழங்கி உதவிடுமாறு மிக்க அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(பயபக்தியுடைய) அவர்கள் (எத்தகையோரென்றால்) அல்லாஹ்வின் மீதுள்ள அன்பினால் ஏழைகளுக்கும், எத்தீம்களுக்கும், சிறைப்பட்டோருக்கும் உணவளிப்பார்கள்.

அல்-குர்ஆன் - 76:8





**G-Pay 87542 22470**

இன்ஷா அல்லாஹ்! வங்கியில் பணம் செலுத்திய பின் மதரஸாவிற்கு தகவல் தெரிவிக்கவும்.

தங்களது **ஜகாத் / ஸதகா** போன்ற உதவிகளை அல் ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸா எனும் பெயருக்கு DD/ செக் மூலமாக கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி எத்தீம்களுக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வங்கி விபரம்**

AL JANNATH YATHEEMKHANA MADRASA
A/C No : 35486597490 State Bank of India
Thevaram Branch, IFS Code : SBIN0014441

C.அபூபக்கர் சித்தீக் தஃவத்தி, D.T.T., நிர்வாகி
**அல் ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸா**
27/2, W-17, 5-வது தெரு, தேவாரம் - 625 530

தொடர்புக்கு
99443 77681
99448 70889
04554-254021



# பசித்திரு!

- அஷ்ஷெய்க்
A.C. அகார் முஹம்மது

ரமளான் 'தஸ்கியத்துன் நப்ஸ்' எனும் உளத்தூய்மையை இலக்காகக் கொண்ட மாதம்; ஆன்மாவைப் பரிசுத்தப்படுத்தி, உரமூட்டி வளர்க்கத் துணை புரியும் மாதம். ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி மேம்படுத்த பல வழிகள் உண்டு. அவற்றை நிறைவாகக் கடைப்பிடிக்கும் சந்தர்ப்பத்தை ரமளான் நமக்குத் தருகின்றது. அவற்றில் முதன்மையானது பசித்திருத்தலாகும்.

ரமளானில் பகல் பொழுது முழுவதும் பசித்திருக்கின்றோம். உணவுக் கட்டுப்பாடு என்பது உடல் ஆரோக்கியத்திற்கும் ஆன்மாவின் ஆரோக்கியத்திற்கும் இன்றியமையாதது என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளாதோர் எவரும் இல்லை.

குறிப்பாக ஆன்மாவின் மேம்பாட்டுக்கும் உணவுக் கட்டுப் பாட்டிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. உண்மையான இறையடியார்கள் பசி இல்லாமல் சாப்பிடு வதில்லை. சாப்பிடும் போதும் வயிறு நிறைய சாப்பிடுவதில்லை.

'உண்ணுங்கள், பருகுங்கள்; விரயம் செய்யாதீர்கள். ஏனெனில் அல்லாஹ் அளவு கடந்து விரயம் செய்வோரை விரும்புவதில்லை (திருக்குர்ஆன்7:31) என்பது அல்லாஹ்வின் கட்டளை. இங்கு விரயம் செய்தல் என்பது மிதமிஞ்சி, வயிறு புடைக்க உணவு உட்கொள்வதையும் குறிக்கும்.

'ஒருவர் தனது முதுகெலும்பை நிமிர்த்தி நிற்கும் அளவுக்குச் சில உணவுக் கவளங்களை உட்கொண்டாலே போதுமானதாகும். அவர் சாப்பிடுவதாக இருந்தால் ஒரு பகுதியை உணவுக்கும் மற்றொரு பகுதியை தண்ணீருக்கும் எஞ்சிய மூன்றாம் பகுதியை மூச்சுக்கும் விட்டு விடட்டும்' என்பது நபியவர்களின் வழிகாட்டல்.

உணவுக் கட்டுப்பாட்டை பேணாமல் வயிறு நிறையச் சாப்பிடுவதனால் ஆன்மாவுக்கு ஏற்படும் ஆபத்துகளை நமது தொடக்க கால அறிஞர்கள் அற்புதமாக விளக்கி

**ஆன்மாவின் மேம்பாட்டுக்கும் உணவுக் கட்டுப் பாட்டிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. உண்மையான இறையடியார்கள் பசி இல்லாமல் சாப்பிடு வதில்லை. சாப்பிடும் போதும் வயிறு நிறைய சாப்பிடுவதில்லை.**

இருக்கின்றார்கள். 'மிதமிஞ்சிய உணவு வணக்க வழிபாடுகளின் சுவையைக் கெடுத்து விடும்; அறிவுத் தேடலைப் பாதிக்கும்; உள்ளத்தில் இரக்க சுபாவத்தை போக்கிவிடும்; வணக்க வழிபாடுகளைச் சுமையாக மாற்றும்; ஆசாபாசங்களைத் தீவிரமடையச் செய்யும்' என்று எச்சரிக்கிறார் அபூ சுலைமான் அத்தாரானி(ரஹ்) அவர்கள்.

இமாம் ஷாபிஈ(ரஹ்) அவர்கள் கூறுகிறார்: 'நான் பதினான்கு ஆண்டுகளாக வயிறு நிறையச் சாப்பிட்டதே இல்லை. ஏனெனில் வயிறு நிறையச் சாப்பிடுவதனால் உடல் ஒரு சுமையாக மாறுகின்றது; உள்ளம் மென்மையை இழந்து, வன்மை அடைகின்றது; புத்தி கெட்டுப் போகின்றது; தூக்கம் மிகைக்கின்றது'

வாயைக் கட்டுப்படுத்தி உணவு உட்கொள்வதைக் குறைப்பதனால் விளையும் நன்மைகள் பல. ஒருவர் உணவு உட்கொள்வதைக் குறைத்தால் உள்ளம் தெளிவடையும். அது எப்போதும் விழிப்பு நிலையில் இருக்கும். அது மென்மையடையும்; கர்வம் குறையும்; பாவங்கள் மீதான மோகம் இல்லாமல் போகும்; உள்ளத்தின் ஆசாபாசங்களை அடக்கியாளும் வல்லமை உருவாகும்; தூக்கம் குறையும்; சுறுசுறுப்பாக இயங்கும் நிலை தோன்றும்; வணக்க வழிபாடுகளில் ஆர்வம் மிகைக்கும்.

எனவே, ஏக காலத்தில் உடல் ஆரோக்கியத்திற்கும், ஆன்மாவின் மேம்பாட்டிற்கும் பெரும் துணையாக அமைகின்ற உணவுக் கட்டுப்பாட்டைப் பேணுவதற்கும் அதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்குமான அற்புதமான சந்தர்ப்பத்தை ரமளான் நமக்குத் தருகின்றது.

ஆயினும் இஃப்தார் வேளையிலும் சஹ்ரின் போதும் மிதமிஞ்சி, வயிறு புடைக்கச் சாப்பிடுகின்ற போது பகல் பொழுதில் பசித்திருந்து பெற்ற பலன்களையும் நன்மைகளையும் இழந்து விடுவோம் என்ற உண்மையை மனதில் கொண்டு நாம் செயல்பட வேண்டும்.

இங்கே ஓர் உண்மையை அழுத்தமாகப் பதிவு செய்ய வேண்டும். நோன்பு நோற்பதால் உலக வாழ்வில் பல பயன்கள் கிடைக்கின்றன என்பது உண்மையாயினும் நாம் நோன்பு நோற்பது அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்ற வேண்டும்; அதன் மூலம் அவனது திருப்தியைப் பெற வேண்டும் என்பதற்காகவே என்ற உண்மையை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

வாயைக் கட்டுப்படுத்தினால் நோயைக் கட்டுப்படுத்தலாம். அது உடல் நோயாக இருக்கலாம்; உள நோயாக இருக்கலாம்; ஆன்மா சார்ந்த நோயாக இருக்கலாம். அனைத்தையும் கட்டுப்படுத்த உணவுக் கட்டுப்பாடு உதவும் என்ற பேருண்மையைப் புரிந்து செயல்பட வேண்டும்.

ரமளான் காலம் நாம் அர்த்தமுள்ள வகையில் பசித்திருந்து, ஆரோக்கியம் பேணிய காலமாக அமையட்டும்; இக்காலத்தில் பெற்றுக் கொண்ட பயிற்சி ரமளானுக்குப் பிறகும் நமக்குப் பயனளிக்கட்டும்!

வயிறு நிறையச் சாப்பிடுவதனால் உடல் ஒரு சுமையாக மாறுகின்றது; உள்ளம் மென்மையை இழந்து, வன்மை அடைகின்றது; புத்தி கெட்டுப் போகின்றது; தூக்கம் மிகைக்கின்றது'



# ஏழைகளை ஜகாத் மூலம் பணக்காரர்களாக்குங்கள்


- H. அப்துர் ரகீப்

பொதுச் செயலாளர், இந்திய இஸ்லாமிய நிதி மையம்(ICIF)

தமிழில்:
மௌலவி
சமியுல்லாஹ் உமரி


**இஸ்லாத்தின் மூன்றாவது தூண் ஜகாத். புனித குர்ஆனின் பல வசனங்களில் ஈமானுக்குப் பிறகு இரண்டு நற்செயல்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. ஒன்று தொழுகை, மற்றொன்று ஜகாத். தொழுகைக்கும் ஜகாத்திற்கும் இடையே ஆழமான தொடர்பு உள்ளது என்பதற்கும், ஒரு முஸ்லிமின் ஈமான் முழுமை அடைவது இரண்டின் மூலமே என்பதற்கும் இது சான்றாகும். ஆனால் இன்று நம் சமுதாயத்தில் தொழுகையை நிலைநாட்ட எவ்வாறு முயற்சி எடுக்கப்படுகிறதோ, அதே அளவில் ஜகாத் கொடுப்பதில் போதுமான கவனம் செலுத்தப்படுவதில்லை. இதற்கு ஒரு முக்கிய காரணம், ஜகாத்தின் கூட்டு முறை அதன் உண்மையான நோக்கம் பற்றிய தவறான கருத்தாகும்.**

### 1. மக்களிடம் ஜகாத்தைப் பற்றிய சரியான புரிதல் இல்லை

பொது மக்கள் பெரும்பாலும் ஜகாத் விஷயத்தில் குழப்பமடைந்து, சரியான புரிதல் இல்லாதவர்களாக உள்ளனர். இதன் விளைவாக, அவர்கள் ஜகாத்தை தவறாகச் செலுத்துகிறார்கள் அல்லது மிகவும் கவலைக்குரிய வகையில் இந்தக் கடமையை நிறைவேற்றுவதில்லை.

### 2. ஜகாத் என்பது வெறும் ஸதகா(தர்மம்) மட்டுமல்ல; இது ஒரு கூட்டு முறையாகும்.

பெரும்பாலான மக்கள் ஜகாத்தை, ஓர் ஏழைக்குச் சிறிது பணம் கொடுத்து விட்டு கடமை நிறைவேற்றப்பட்டதாகக் கருதுகிறார்கள். உண்மையில் ஜகாத் என்பது வெறும் தர்மம் மட்டுமல்ல; அது ஒரு முழுமையான கூட்டு வழிமுறையாகும். அதன் நோக்கம் தற்காலிக உதவியை வழங்குவது மட்டுமல்ல; கொடுப்பவரின் ஈமானை வலுப்படுத்துவதும், வாங்குபவரின் வாழ்க்கையில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதுமாகும்.

### 3. தவறான விநியோகத்தின் விளைவு

ஜகாத்தின் உண்மையான பயனாளிகள் யார் என்பதைக் குர்ஆன் தெளிவாகக் கூறியுள்ளது (அதில் எட்டு வகைகள் உள்ளன). ஆனால் பெரும்பாலான மக்கள் இதுகுறித்து தீவிரமாக விசாரிப்பதில்லை. ஏதோ தேவையுள்ள ஒருவருக்குச் சிறிது தானியம், சில ஜோடி ஆடைகள் அல்லது ஒரு சிறிய தொகையை வழங்குவதில் தங்களது கடமை நிறைவேற்றப்பட்டதாக அவர்கள் நினைக்கிறார்கள். இதன் விளைவாக ஏழை அந்தச் சிறிய உதவியைப் பயன்படுத்துகிறார். ஆனால் அவரது வறுமை முடிவுக்கு வருவதில்லை. சொந்தக் காலில் நிற்கப் போதுமான உதவி கிடைக்காததால் அவர் ஏழையாகவே தொடர்கிறார்.

சுருக்கமாகச் சொன்னால் ஜகாத்தின் உண்மையான நோக்கம் தற்காலிகமாகப் பசியைப் போக்குவது மட்டுமல்ல; வறுமையை வேரோடு ஒழிப்பதாகும். ஜகாத் முறையாகச் சேகரிக்கப்பட்டு முறையாக விநியோகிக்கப்பட்டால், சமூகத்திலிருந்து வறுமையை ஒழிக்க முடியும். ஜகாத்தைப் பெறுபவர்களும் ஒரு நாள் ஜகாத் கொடுப்பவர்களாக மாறலாம். குர்ஆன், ஹதீஸின் அடிப்படையில், ஜகாத்திற்கு மூன்று முக்கிய நோக்கங்கள் உள்ளன என்று **மௌலானா சத்ருதீன் இஸ்லாஹி** கூறுகிறார்.

### உள்ளத்தைத் தூய்மைப்படுத்துதல்

ஜகாத்தின் உண்மையான, அடிப்படையான முதலாவது நோக்கம், அது அந்த நபருடன் முழுமையாகத் தொடர்புடையதாகும். அதாவது, ஜகாத் கொடுப்பவர் உலகப் பேராசையிலிருந்து விடுபட்டு, உள்ளம் தூய்மையடைந்து, நற்செயல்கள் செய்பவராக, இறையச்சம் உடையவராகத் திகழ வேண்டும். திருக்குர்ஆன் கூறுகிறது: 'மேலும், அதனை விட்டுத் தொலைவில் வைக்கப்படுவார், மிகுந்த இறையச்சம் உடையவர். அவரோ தூய நிலை அடையும் பொருட்டு தம் செல்வத்தை வழங்குகின்றார்' (திருக்குர்ஆன் 92:17,18)

'(நபியே!) அவர்களுடைய பொருள்களிலிருந்து தானத்தை வசூல் செய்துகொண்டு அதன் மூலம் அவர்களைத் தூய்மையாக்குவீராக; (நல்வழியில்) அவர்களை முன்னேறச் செய்வீராக!' (திருக்குர்ஆன் 9:103)

### ஏழைகளுக்கு உதவுதல்

ஜகாத்தின் இரண்டாவது நோக்கம், சமூகத்தின் ஏழை மக்களுக்கு உதவுவதும், அவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதும் ஆகும். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நிச்சயமாக அல்லாஹ், அவர்களின் செல்வத்தில் சதகாவை(ஜகாத்) கடமையாக்கி உள்ளான்; அது அவர்களின் செல்வந்தர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு, அவர்களின் ஏழைகளுக்குத் திருப்பித் தரப்படும்'.

### மார்க்கத்தைப் பாதுகாத்தல்

ஜகாத்தின் மூன்றாவது நோக்கம், மார்க்கத்தைப் பாதுகாப்பதும், உதவுவதும் ஆகும். ஜகாத் பணத்தை யாருக்காக, எங்கு செலவிட வேண்டும் என்பதைத் திருக்குர்ஆன் இவ்வாறு விளக்குகிறது: 'இந்த தானதர்மங்களெல்லாம், ஏழைகள், வறியவர்கள், இந்த தானதர்மங்களை வசூலிக்கவும் பங்கிடவும் நியமிக்கப்பட்ட பணியாளர்கள், உள்ளங்கள் இணக்கமாக்கப்பட வேண்டியவர்கள், பிடரிகளை விடுவிப்பதற்கும், கடனாளிகளுக்கும் இறைவழியில் செலவு செய்வதற்கும் பயணிகளுக்கும் உரியனவாகும்' (திருக்குர்ஆன் 9:60)

### ஜகாத்தின் கூட்டு முறை

குர்ஆன், சுன்னாவில், ஜகாத் என்ற கருத்து தனிப்பட்ட தர்மம் அல்ல; மாறாக, அது ஒரு கூட்டு, அரசு முறையாகும். சர்வ வல்லமையுள்ள அல்லாஹ், நம்பிக்கையாளர்களின் பண்புகளைப் பற்றி இவ்வாறு கூறுகின்றான்: 'எவர்கள் இறை நம்பிக்கை கொண்டு நற்பணிகள் ஆற்றி, தொழுகையையும் நிலைநாட்டி, ஜகாத்தும் கொடுத்து வருகின்றார்களோ, அவர்களுக்கு உரிய கூலி நிச்சயமாக அவர்களுடைய அதிபதியிடம் உண்டு' (திருக்குர்ஆன் 2:277)

அல்லாஹ்வின் இந்தத் தெளிவான வார்த்தைகள், நம்பிக்கைக்கான வாக்குறு திக்குப் பிறகு, ஒரு முஸ்லிம் அல்லாதவரை முஸ்லிமாக ஏற்றுக்கொள்வது இரண்டு விஷயங்களைப் பொறுத்தது என்பதைக் குறிக் கிறது: முதலாவதாக, அவர் தொழுகையை நிலைநாட்ட வேண்டும்; இரண்டாவதாக, அவர் ஜகாத் செலுத்த வேண்டும்.

'ஆயினும், இவர்கள் பாவமீட்சி பெற்று, தொழுகையை நிலைநாட்டி, ஜகாத்தையும் கொடுத்தால், தீனில் (மார்க்கத்தில்) இவர்கள் உங்கள் சகோதரர்களாவர்' (திருக்குர்ஆன் 9:11)

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(ரலி) கூறு கிறார்கள்: 'தொழுகையை நிலைநாட்டவும், ஜகாத் கொடுக்கவும் நமக்குக் கட்டளை யிடப்பட்டுள்ளது. யார் ஜகாத் கொடுக்கவில் லையோ, அவருடைய தொழுகை ஏற்றுக் கொள்ளப்படாது' அதனால்தான், அபூபக்கர் சித்தீக்(ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் சிலர் ஜகாத் கொடுக்க மறுத்தபோது, அவர் களுக்கு எதிராகப் போரை அறிவித்து, 'அல்லாஹ்வின் மீது ஆணையாக, தொழுகைக் கும் ஜகாத்துக்கும் இடையில் வேறுபாடு காண்பவர்களுடன் நான் போரிடுவேன்' என்று கூறினார். (முஸ்லிம், புகாரி, ஹதீஸ் 1399)

**அல்லாமா யூசுஃப் அல் கர்ளாவி** எழுது கிறார்: 'ஜகாத்தை எதிர்ப்பவர்களுக்கு எதிரான அபூபக்கர்(ரலி) அவர்களின் போர், மனித வரலாற்றில் முதன்முறையாக ஓர் அரசாங்கமோ அல்லது அரசு அமைப்போ சமூகத்தில் பலவீனமானவர்கள், ஏழைகளின் உரிமைகளை உறுதி செய்வதற்காகப் போராடத் தயாராக இருந்தது என்ற அர்த்தத்தில் மிகவும் முக்கியமானதாகும்' (ஃபிக்ஹ் அல் - ஜகாத்)

### நபி(ஸல்) அவர்களின் காலகட்டத்தில் ஜகாத் முறை

ஜகாத் வசூலிப்பதற்கான ஒரு முறையான கூட்டு அமைப்பை நபி(ஸல்) அவர்கள் நிறுவினார்கள். அதன் சில முக்கியப் பகுதிகள் பின்வருமாறு:

#### 1.ஜகாத் வசூலிக்கும் அதிகாரிகள் [உம்மால் அஸ்ஸதகாத்]

இவர்களில் உமர்(ரலி), அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப்(ரலி), அம்ர் பின் அல் ஆஸ் (ரலி) போன்ற புகழ்பெற்ற நபித்தோழர்களும் அடங்குவர். நபி(ஸல்) அவர்கள் கூறி னார்கள்: 'சத்தியத்துடனும் நீதியுடனும் ஜகாத் வசூலிப்பவர், தனது வீட்டிற்குத் திரும்பும் வரை அல்லாஹ்வின் பாதையில் போராடு பவரைப் போன்றவர்' (இப்னு அபீ ஷைபா, ஹதீஸ் 10818)

#### 2. கணக்கர்கள் [காதிபீனே ஸதகாத்]

இவர்களில் ஜுபைர் பின் அவ்வாம்(ரலி) போன்றவர்கள் இருந்தனர்.

#### 3. விளைச்சலை மதிப்பிடுபவர்கள் [காரிஸின்கள்]

அப்துல்லா பின் ரவாஹா(ரலி) போன்ற வர்கள் இதில் அடங்குவர். நபி(ஸல்) அவர் களும் கராசின் நிபுணராக இருந்தார்கள். தபூக் பயணத்தின் போது, ஒரு முஸ்லிம் பெண்ணின் தோட்டத்தின் விளைச்சலை அவர்கள் மதிப்பிட்டார்கள்; அது முற்றிலும் துல்லியமாக இருந்தது. (புகாரி)

#### 4. கால்நடையிலிருந்து கிடைக்கும் வருவாய்க்கு ஜகாத் வசூலிப்பவர்கள் [ஆமீலின் அலல் ஹமாஅ]

நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் பொற் காலம். உமர் பாரூக்(ரலி) அவர்கள் கலீஃபாவாக இருந்த போது நடந்த இந்தச் சம்பவம், ஜகாத் முறையின் செயல்திறனைக் காட்டுகிறது. முஆத் பின் ஜபல்(ரலி) அவர்கள் யமனிலிருந்து ஜகாத் தில் மூன்றில் ஒரு பங்கை அனுப்பியபோது, உமர்(ரலி)அவர்கள், 'நான் உங்களை ஜகாத் வசூலிக்க அனுப்பவில்லை; மாறாக, அங்கு உள்ள பணக்காரர்களிடமிருந்து ஜகாத் வசூலித்து, அங்கேயே உள்ள ஏழைகளுக்கு விநியோகிக்க அனுப்பினேன்' என்று கூறினார். அங்கு ஜகாத் வாங்குபவர்கள் யாரும் இல்லை என்று முஆத் (ரலி) அவர்கள் பதிலளித்தார். மூன்றாம் ஆண்டில் முஆத்(ரலி)

அவர்கள் அனைத்து ஜகாத் செல்வங்களையும் அனுப்பி, ‘இங்கே ஜகாத் பெற்றுக் கொள்ளும் நிலையில் யாரும் இல்லை’ என்று கூறினார்கள்.

உமர் பின் அப்துல் அஜீஸ்(ரஹ்) அவர்களின் ஆட்சிக் காலத்திலும் இதே நிலைமை ஏற்பட்டது. அப்போது சமூகத்தில் உள்ள அனைவரும் செல்வந்தர்களாக மாறினர்; வறுமை அல்லது வறுமைக்கான எந்த அறிகுறியும் இல்லாமல் இருந்தது. (அபு உபைத்: கிதாப் அல்-அம்வால்)

தேவையானவர்களையும் ஏழைகளையும் பராமரிப்பது முஸ்லிம் சமுதாயத்தின் கூட்டுப் பொறுப்பாகும். ஆனால், இதற்கான விழிப்பு உணர்வு இல்லாமல் இருப்பதற்கான ஒரு முக்கியக் காரணம், பொருளாதார வளர்ச்சியில் போதிய கவனம் செலுத்தப்படாததுதான். **டாக்டர் முஹம்மது நஜதுல்லா சித்தீகி** எழுதுகிறார்: ‘சாதாரண முஸ்லிம்கள் கடினமாக உழைக்கவும், செல்வத்தை உருவாக்கவும், சம்பாதிக்கவும், தங்கள் வருவாயில் ஒரு பகுதியைச் சேமிப்பதன் மூலம் லாபகரமான முதலீட்டின் வழியாகத் தங்கள் வருமானத்தையும் செல்வத்தையும் அதிகரிக்க முயற்சிக்கவும் ஊக்குவிக்க அத்தகைய இயக்கம் எதுவும் இல்லை என்பது வியப்பாக இருக்கிறது. முஸ்லிம்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், அவர்களின் பொருளாதார வலிமையை அதிகரிக்கவும், முழு நாட்டிலும் எந்த ஓர் இயக்கமும் இல்லை’ (இஸ்லாம், முஸ்லிம்கள், பக். 36)

### ஜகாத்தின் கூட்டு முறை இல்லாமை

நமது நாட்டில் கூட்டு ஜகாத் முறை கிட்டத்தட்ட இல்லை என்றே சொல்லலாம். ஒரு சில அமைப்புகள் இந்த விஷயத்தில் செயல்பட்டு வருகின்றன; ஆனால் முஸ்லிம் சமுதாயம் அதைப் பெரிய அளவில் பின்பற்றுவதில்லை. வழக்கமாக, மதரஸாக்களின் அறிஞர்கள் பல்வேறு நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் ரமளான் மாதத்தில் ஜகாத்தைச் சேகரிப்பார்கள். இதற்குப் பிறகு, ஏராளமான ஏழை மக்கள் செல்வந்தர்களின் வீடுகளுக்கு நேரடியாக வந்து சில ரூபாய்கள், தானியங்கள் அல்லது துணிகளைப் பெற்றுக் கொண்டு செல்கிறார்கள்.

இத்தகைய நடைமுறை ஜகாத் கொடுப்பவரின் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துதல், வறுமையை ஒழித்தல், தேவையானவர்களைத் தன்னிறைவு பெறச் செய்தல், மார்க்கத்தைப் பாதுகாப்பது ஆகிய ஜகாத்தின் உண்மையான நோக்கங்களை முழுமையாக நிறைவேற்றுவதில்லை.

கூட்டு ஜகாத் முறையைப் பற்றிய விவாதங்களில், பைத்துல்மால் ஒன்றை நிறுவுவதற்கு ஓர் இஸ்லாமிய அரசாங்கம் அவசியமில்லையா? என்ற கேள்வி பொதுவாக எழுப்பப்படுகிறது. ஜகாத் என்பது அதன் முன்னோடிகளால் வகுக்கப்பட்ட கொள்கைகள், விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு தூணாகவே உள்ளது. ஆனால் நவீன காலச் சிக்கல்களை நடைமுறையில் செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

**மௌலானா ஹாபீஸ் சையத் அப்துல் கபீர் உமரி** கூறுவது போல, ‘முன்னோடி அறிஞர்கள் மார்க்கத்தின் பிற தூண்கள் தொடர்பான பிரச்னைகளுக்கு விரிவான விதிகள் ஒழுங்குமுறைகளை வகுத்துள்ளனர்.

ஆனால் ஜகாத்தைச் சார்ந்த விஷயங்களில் முன்னோர்களால் கூறப்பட்ட கொள்கைகள் காணப்பட்டாலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. காரணம் இன்றைய நவீன பிரச்னைகள் முன்னோடிகளின் காலத்தில் கருத்தில் கொள்ளப்படவில்லை. எனவே நவீன காலச் சவால்களுக்கு இஸ்லாமியத் தீர்வுகளை முன்வைப்பதும், அவற்றுக்கான ஷரீஅத் விதிகளைக் கண்டறிய முயற்சிப்பதும் காலத்தின் மிக முக்கியமான தேவையாகும்.’

ஜகாத் கூட்டு முறைக்கு அரசாங்கம் தேவை என்ற கருத்தும் அதற்கான தீர்வும் இஸ்லாமிய ஆட்சி இல்லாத நாட்டில் பைத்துல்

மால் அமைப்பதற்கு எதிராக முன்வைக்கப் படும் ஆட்சேபனைகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, **மௌலானா அபுல் கலாம் ஆசாத்** எழுதுகிறார்: ‘இந்தியாவில் இஸ்லாமிய அரசாங்கம் இல்லை என்பதற்காக, முஸ்லிம்கள் ஜகாத்தை தனித்தனியாகச் செலவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்று கூறுவது மார்க்கம், பகுத்தறிவுக் கண்ணோட்டங் களில் ஏற்றுக்கொள்ள முடியாத சாக்குப் போக்காகும்.

ஓர் இமாம் ஓர் அரசன் சார்ந்து நிறுவப் பட வேண்டிய இஸ்லாமிய அரசாங்கம் இல்லாதபோதிலும், வெள்ளிக்கிழமை தொழுகை கைவிடப்படவில்லை என்றால், ஜகாத் முறையை மட்டும் ஏன் கைவிட வேண்டும்? நம்முடைய இஸ்லாமிய விவகாரங்களுக்காக ஓர் அமீரைத் தேர்ந் தெடுக்கவோ, ஒரு மத்திய பைத்துல் மாலை உருவாக்கவோ, தேவைகளுக் காக சங்கங்களை அமைக்கவோ, அல்லது எண்ணற்ற தேவையற்ற விஷயங்களுக் காகச் சில சந்தர்ப்பங்களில் புதுமைகளுக் காகவும் சங்கங்களை உருவாக்கவோ முஸ்லிம்களின் கைகளை யார் கட்டினார்கள்?’

**மௌலானா அபுல் கலாம் ஆசாத்** எழுதுகிறார்: ‘ஒவ்வொரு நகரத்திலும், ஒவ் வொரு பகுதிக்கும் குறைந்தது ஐந்து பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அவர்கள் ஜகாத்தை சேகரித்து, ஒழுங்கமைத்து, முழுப் பொறுப்புடனும் ஒழுங்குடனும் அதைச் செலவிட வேண்டும்.’

**முஃப்தி கிஃபாயத்துல்லாஹ்** எழுது கிறார்: ‘ஷரீஆ கட்டளைகளின் அடிப் படையிலும், மனித நலன் தொடர்பான தேவைகளின் அடிப்படையிலும், நிதிக் கடமைகளான ஜகாத், உஷ்ர் தொடர்பாக, அவற்றை வசூலிப்பதிலும் விநியோகிப் பதிலும் கூட்டமைப்பிற்கு முழுக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதே அவற்றின் கோரிக்கையாகும். (தனிப்பட்ட விஷயங் களில் கூட்டமைப்பு இல்லை என்பது தெளி வானது.) இத்தகைய பிரிவினைகள் நிறைந்த இந்தக் காலகட்டத்தில், ஒப்பந்தங்களைச் செய்யக்கூடிய ஒரு குழு இந்தப் பணியைத் தங்களது கைகளில் எடுத்துக்கொள்வதே ஒரே சாத்தியமான வழியாகத் தெரிகிறது’

**மௌலானா சத்ருதீன் இஸ்லாஹி** எழுது கிறார்: ‘முஸ்லிம் குடியிருப்புகள் தங்கள் தொழுகைக்காக ஒரு மஸ்ஜித், ஜமாஅத் இமாமத்தை ஏற்பாடு செய்வது போலவே, அவர்கள் தங்கள் ஜகாத்துக்காகவும் ஒரு பைத்துல்மாலை நிறுவ வேண்டும். இது செய்யப்படாவிட்டால், அது ஒரு கூட்டுத் தவறாகும்.

### வெளி, உள் சொத்துகளின் பிரச்னை

சில அறிஞர்கள், ஜகாத் சொத்துகளை வெளிச் சொத்துகள் (தானியங்கள், கால் நடைகள்) உள் சொத்துகள் (தங்கம், வெள்ளி, வணிகப் பொருட்கள்) எனப் பிரிக்கிறார்கள். அதே நேரத்தில் உஸ்மான்(ரலி) அவர்களின் காலத்தில் நடைமுறையில் இருந்தது போல உள் சொத்துகளின் ஜகாத் விநியோகம் உரிமையாளரின் விருப்பத்திற்கு விடப் படலாம் என்றும் அவர்கள் கூறுகின்றனர். உஸ்மான்(ரலி) அவர்களின் காலத்தில் உம்மத் மூன்று கண்டங்களில் பரவியிருந்தது.

தொலைதூரப் பகுதிகளிலிருந்து ஜகாத் வசூலிப்பதற்கான நிர்வாகச் செலவுகள், வசூலிக்கப்படும் வருமானத்தை விட அதிக மாக இருக்கக்கூடிய சூழ்நிலை இருந்ததால், உரிமையாளர்களே ஜகாத்தை விநியோகிக்க அனுமதிக்கப்பட்டனர். இது அரசாங்கம் மூலம் விநியோகிக்க இயலாத சூழ்நிலைக் கான ஒரு சிறப்பு ஏற்பாடாகும்.

தேவையுள்ளவர்களை வளப்படுத்த பத்து அம்சத் திட்டம் நாட்டில் வறுமையை ஒழிக்கவும், ஜகாத் முறையை அதன் அசல் நிலைக்கு மீட்டெடுக்கவும், ஒரு விரிவான திட்ட மிடப்பட்ட இயக்கம் தேவை. இதற்காக, பத்து அம்சங்களைச் செயல்படுத்துவது ஒரு புரட்சி கரமான மாற்றத்தை ஏற்படுத்தும். **அதனை அடுத்த இதழில் விரிவாகக் காண்போம்.**

(தொடரும்)

# ஜகாத்

## அல்-அமீன் எத்தீம் கானா

அல்-அமீன் நகர், கோ.புதூர், மதுரை – 625007.

அஸ்ஸலாமு அலைக்கும்
அல்லாஹ்வின் அளப்பெரும் கருணையினால்...

**நமது மதுரை அல்-அமீன் எத்தீம்கானா**
**65 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.**

உலகெங்கும் பணியாற்றி கொண்டிருக்கும்
ஆயிரமாயிரம் மாணவர்களே அதற்கு மகத்தான சாட்சி.

எத்தீம் பிள்ளைகளுக்கு முழுமையான தீன்கல்வி, கல்லூரிப் படிப்பு வரை உலக கல்வி, உணவு, உடை, மருத்துவம், தங்கும் வசதி என அத்துனையும் இலவசமாக வழங்கி தாயன்புடன் பராமரித்து பாதுகாத்து வரும் நமது அல்-அமீன் எத்தீம் கானாவிற்கு

## உங்கள் ஜகாத்தை பெருமளவில் வழங்கி

### எத்தீம் பிள்ளைகளின் உயர்வுக்கு உதவிடுமாறு

அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் ஜகாத் / சதகா
போன்ற உதவிகளை கீழ்க்கண்ட வங்கி கணக்கு அல்லது QR Code மூலமாக அனுப்பி உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

### BANK ACCOUNT DETAILS

A/c Name : AL-AMEEN ETHEEM KHANA
Current A/c No: 435401010010013
IFSC Code: UBIN0803499
Union Bank of India, South Masi Street, Madurai-625 001

Scan & Donate

இன்ஷா அல்லாஹ், வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியதும் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

AL-AMEEN ETHEEM KHANA
65 YEARS
DON'T REPEL ORPHANS
MADURAI, SINCE 1960

நமது எத்தீம் கானா சார்பாக வசூல் செய்ய எப்போதும் யாரையும் நியமிக்கவில்லை

மேலும் விபரங்களுக்கு 98420 21786 | 97894 89494




## சமய நல்லிணக்கப் பேரவையின்

# தொடக்கப் புள்ளி

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை பெருநகரத்தின் சார்பாக சமூக முன்னேற்றத்திற்கான உரையாடல்(Dialogue For Social Empowerment) 2026 ஜனவரி 27ஆம் நாள் கோவை சிறுதுளி அரங்கில் நடைபெற்றது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை பெருநகரத் தலைவர் P.S.உமர் ஃபாரூக் தலைமை தாங்கிய இந்த நிகழ்வை ஆசிரியர் சலீம் வழிநடத்தினார்.

இந்த நிகழ்வில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியத் தலைவர் சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு மாநிலத் தலைவர் மௌலவி முஹம்மது ஹனீஃபா மன்பஈ, Universal Peace Foundation அமைப்பின் நிறுவனர் சிவாத்மா குருஜி, ரோமன் கத்தோலிக்க சர்வ சமயப் பொறுப்பாளர் அருட்தந்தை தன்ராஜ், குருத்வாரா சபையின் சார்பில் டோனி சிங் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

ஜெயின் சமூகத்தின் சார்பில் அரவிந்த் ஷா ஜெயின், TASK அமைப்பின் தலைவர் குருதீப் சிங் ஆனந்த், RAAC அமைப்பின் செயலாளர் ரவீந்திரன், யுனிவர்செல் பிரதர்ஹுட் அமைப்பின் சார்பில் நந்தகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இதுபோன்ற நிகழ்வுகள் அடிக்கடி நடைபெற வேண்டும். நாம் ஒருவரையொருவர் நெருங்கிப் பழகவும், புரிந்து கொள்ளவும் இந்த நிகழ்வு அவசியம். கோவையில் சமய நல்லிணக்கப் பேரவை தொடங்கப்பட வேண்டும் என்பதை நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய ஆன்மிகத் தலைவர்கள் வலியுறுத்தினர்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியத் தலைவர் சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி தமது உரையில் முதல்நாள் நடைபெற்ற குடியரசு தினத்தை நினைவு கூர்ந்தார். ‘நாம் பல மதங்கள், மொழிகளைக் கொண்டிருந்தாலும் ஒன்றுபட்டு, ஒற்றுமையாக வாழ்வது நமது நாட்டின் பன்மைத் தன்மைக்கு அடித்தளமாகும். ஒரே மாதிரியாக, ஒன்றாக ஆகி விடுவது என்பதல்ல, நாம் வெவ்வேறு கருத்துகளைக் கொண்டிருந்தாலும் ஒற்றுமையாக ஒருமைப்பாட்டுடன் வாழ்வதுதான் நமது முதிர்ச்சியைக் காட்டுகிறது. பல்வேறு

நாடுகள் இதைக் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

‘நீதி, சமூக, பொருளாதார அரசியல் சுதந்திரம் அனை வருக்கும் பொதுவானது. சிந்தனை உரிமை பேச்சு, எழுத்து உரிமைகள் அனைவருக்கும் பொது வானவை’ என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. எனவே அவற்றை நாம் நிலைநாட்ட பாடு பட வேண்டும்.





C - Consciousness, I - Integrated Action of Like Minded People, V- Vigilance, I - Institutional Reform, C- Constitutional Culture. இந்த வகை யான CIVIC (குடிமையியல்) தான் இன்றைய தேவை’ என்றார்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு தலைவர் மௌலவி ஹனீஃபா மன்பஈ பேசும் போது, ‘நீங்கள் நன்மையான காரியங்களில் ஒருவருக் கொருவர் உதவியாளராக இருங்கள். தீமை யான காரியங்களில் ஒருவருக்கொருவர் உதவாதீர்கள்’ என்று திருக்குர்ஆன் கட்டளை யிடுகிறது. அந்த அடிப்படையில் சமூக மேம்பாடு எனும் நன்மையான செயலுக் காக நாம் ஒருவருக்கொருவர் உதவக் கூடியவர்களாக அதை மேம்படுத்தக் கூடிய வர்களாகத் திகழ வேண்டும் என்று குறிப் பிட்டார்.

சிவாத்மா குருஜி தமது உரையில், ‘நாம் எப்போதோ ஒரு முறை கூடினோம். பேசிக் கலைந்தோம் என்று இருக்கக் கூடாது. நாம் தொடர்ந்து இது போன்ற நிகழ்வுகளை நடத்த வேண்டும். அதற்காக ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும். தனி மனிதர்களுக்கிடையே உள்ள தவறான சிந்த னையை, தவறான புரிதல்களை நீக்குவதற் காக அந்த அமைப்பு முயல வேண்டும்.

தனி நபருக்கு ஏற்படும் தவறான புரி தலும் சிந்தனையுமே சமயங்களுக்கிடையே பிரிவினையை வெறுப்பு உணர்வை விதைக் கக் காரணமாகி விடுகிறது. எனவே சமயங் களுக்கிடையே ஒற்றுமையை, ஒருமைப் பாட்டை, புரிந்துணர்வை ஏற்படுத்த இது போன்ற அமைப்புகள் தேவை’ என்று வலியுறுத்தினார்.

CSI திருப்பள்ளியைச் சேர்ந்த அருட்தந்தை கருணாகரன், திவ்யோதயா இயக்குநர் அருட்தந்தை வில்சன், சிறுதுளி அமைப்பின் சின்னசாமி, ஓசை அமைப்பின் சையத், பசுமைத் தாயகம் அமைப்பின் ராஜேந்திரன், ஈர நெஞ்சம் அமைப்பின் மகேந்திரன், சமூக செயல்பாட்டாளர்களான சிராஜ், மேட்டுப் பாளையம் மணி, ஜவஹர், TELC, ரிதம் உள்ளிட்ட தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த வர்கள், கல்வியாளர்கள் பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றுச் சிறப்பித்தனர். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை மக்கள் தொடர்புச் செயலாளர் அப்துல் ஹக்கீம் நிகழ்வை சிறப்பாக ஒருங்கிணைத்தார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநில, மாவட்டப் பிரதி நிதிகளும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

தொகுப்பு: **B.சையத் இப்ராஹீம்**

● ஜரினா ஜமால்

# அக்கரைப் பச்சை 33

சாலிஹா வீட்டுக்குப் புறப்பட்டாள். ஆமினா அக்கா ஒரு தூக்கு வாளியில் தக்கடியைப் போட்டு, அம்மாவுக்கும் ரசிதாவுக்கும் கொடுத்தனுப்பினாள். பெரியவன் ஆட்டோ பிடித்து வந்தான். தானும் உடன் வந்து விட்டு வருவதாகக் கூறி ஆமினாக்காவும் புறப்பட்டாள்.

'சாச்சி! நா வண்டியில வரும்போது அம்மாவைக் கூட்டி வந்து விடுகிறேன்' என்று அவர்களுடன் ஆமினாக்காவின் சின்ன மகனும் புறப்பட்டான்.

வீடு வந்து நுழைந்தவுடன், கட்டிப்பிடித்து கன்னத்திலும் நெற்றியிலும் முத்தமழை பொழிந்தாள் சாலிஹாவின் சித்தி. தாயின் உடன் பிறந்தவர் களைச் சாச்சி, பெரியம்மா என்று அழைப்பார்கள்.

பீவியம்மாவிற்கு ஒரே தங்கை. பெயர் சித்தி மிஸ்ரியா. பீவியம்மா தங்கையை சித்திமா என்று அழைப்பதைப் பார்த்து எல்லோரும் சித்திமா என்றே அழைத் தார்கள்.

'சித்திமா நல்லா இருக்கீங்களா?'

'நா நல்லாருக்கேமா! நீங்களெல்லாம் சொகமா இருக்கீங்களா? ஆமினா ரொம்ப இளைச்சுப் போயிட்டியே! மருமகன் போனாலும் போனாரு உன் சதையையும் வாங்கிட்டுப் போயிட்டாரு'

சிறிது நேரம் பேசிவிட்டு ஆமினா புறப் பட்டுச் சென்றாள். அம்மாவிடமும் வழி சொன்னாள்.

'இருந்து போயேன் ஆமினா. சித்திமா வராதவ வந்து இருக்கா' பீவியம்மா மகளிடம் கூறினாள்.

'அடுத்த வாரம் வர்றேம்மா! வீட்ல எல்லாம் அப்படி அப்படியே போட்டுட்டு வந்து இருக்கேன். ரெண்டு மருமகளும் வந்திருக்காங்க. பிள்ளைங்க பாடா படுத் துவாங்க.. வாரேன்..' என்று கூறி புறப் பட்டுவிட்டாள்.

'பேரப்பிள்ளை எப்படி இருக்கீங்க?' ஆமினாவின் மகனைப் பார்த்து சித்திமா கேட்டாள். அவன் பாட்டிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கையைப் பிடித்து சொடக்கு விட்டுக் கொண்டிருந்தான்.

'நல்லா இருக்கேன் கண்ணும்மா. நீங்க வாங்க வீட்டுக்கு'

'வரேன்ம்பா! எங்க போக முடியுது? யாராவது கூட்டிப் போனால் தான் உண்டு. வயசாயிருச்சுல தனியா வர்றது கஷ்டம் தான்பா'

பாட்டியை பெரும்பாலும் கண்ணம்மா! அல்லது கண்ணா! என்றே அழைப் பார்கள்.

'சித்திமா என்ன சாப்பிட் டீங்க? கொஞ்சம் தக்கடி சாப் பிடுங்களேன்' சாலிஹா தட்டில் எடுத்து வைத்துக் கொடுத்தாள்.

'ரசிதா நீயும் சாப்பிடு! தம்பி மனைவி யிடம் கூறினாள். 'அம்மா சாப்பிடுறீங் களா?' பீவி அம்மாவைக் கேட்டாள்.

'காலையிலேயே ஓட்ஸ் கஞ்சி போட்டு கொடுத்துட்டாமா. இதெல்லாம் இப்ப சாப்பிட முடியாது. செமிக்காது'

'எவ்வளவு நாள் ஆகிவிட்டது தக்கடி சாப்பிட்டு. நல்ல ருசியாகச் சமைத்து இருக்கிறாள் ஆமினா. ரசித்துச் சாப்பிட்டாள் சித்திமா'

'ஆமினாக்கு தக்கடி போட வராது! சாலிஹாதான் போட்டிருப்பா! நீ தானே போட்டே!'

'ஆமாம்மா'

சாப்பிட்டு முடித்த பாத்திரங்களை உள்ளே கொண்டு சென்றாள் ரசிதா.

'சித்திமா மருமகள்கள், பேரன், பேத்திகள் எல்லாம் எப்படி இருக் கிறார்கள்?' என்றாள் சாலிஹா.

'அவங்களுக்கு என்னம்மா உங்க உங்க சோறு! ஒழக்கு ஒழக்கு நெய்யின்னு

நல்லாத்தான் கழிக்கிறார்கள். நாந்தான் உத்த செய்தி சொல்ல ஆளில்லாமல் நெஞ்சிலே வச்சி மாஞ்சி கிடக்கேன்'

'சாலிஹா! இப்பதான் உன் முகம் நல்லா இருக்குதும்மா! சல்மான் போன பிறகு வாடி, வசங்கி போயிருந்த. என் வீட்டுக்கு வரவேண்டியவ எங்கேயோ போயிட்டேமா'

ஆரம்பத்திலேயே தன் மகனுக்கு சாலிஹாவைக் கேட்டாள் சித்திமா. பீவி அம்மா ஒரே வார்த்தைக் கூறிவிட்டாள்.

'நாம இப்படியே இருப்போம். அக்கா தங்கை உறவாகவே இருக்கட்டும். சம்பந்தி என்ற உறவு வந்து நமக்குள் பிரிவினை வர வேண்டாம்'

ஆமினாவின் மாப்பிள்ளை வேறு குதித்தார், 'அக்கா தங்கைக்குள் சம்பந்தமா அது நல்லாவா இருக்கு?'

பீவியம்மா மருமகனுக்குப் பதில் கூறினாள். 'இஸ்லாத்தில் அப்படி அக்கா தங்கச்சி சம்பந்தம் கலக்கலாம் வாப்பா'

'அதெல்லாம் ரத்த உறவு இல்லையா என்ன இப்படி அசிங்கமா பேசுறீங்க! சின்னம்மா மகன் அண்ணன் அல்லவா?' என்றார்.

'இதெல்லாம் ரத்த உறவு இல்லை வாப்பா! இஸ்லாம் இதற்குத் தடை சொல்லல. கூடப் பிறந்தால்தான் ரத்த உறவு. பெண் பிள்ளைகள் தாய் மாமனைக் கட்டிக் கொள்ளக் கூடாது. சித்தப்பா பெரியப்பாவைக் கட்டிக் கொள்ளக்கூடாது. ஆம் பிள்ளைகள் சின்னம்மா பெரியம்மாவைத் திருமணம் முடிக்கக்கூடாது.



அதுபோல தகப்பனோடு பிறந்த அத்தையைக் கட்டிக் கொள்ளக் கூடாது. இது தான் முதல் முக்கிய ரத்த உறவு'

'நான் அந்தக் காரணத்திற்காக வேண்டாம்னு சொல்லலை. எனக்கு இருப்பதோ ஒரே ஒரு தங்கச்சி. நாளைக்கு ஏதாவது வம்பு தும்பு வரக்கூடாது என்று தான் வேண்டாம் என்று சொல்றேன்' ஆனாலும் சித்திமாவுக்கு சாலிஹா மேல் ஒரு கண். தன் வீட்டிற்கு அவளை மருமகள் ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று படாத பாடு பட்டாள். ஆனால் விதி வேறாக இருந்தது. நேரம் கிடைக்கும்போதெல்லாம் அதைப் பற்றிச் சொல்லிக் கொண்டே இருப்பாள். தன் மகன் பிள்ளைகளைக் காட்டி, 'உன் வயிற்றில் பிறக்க வேண்டிய குழந்தைகள்' என்று கூறுவாள்.

'சித்திமா யார் யார் விதி எங்கெங்கோ. இனிமே அதைப்பற்றி சொல்லாதீங்க. நான் அவங்களையெல்லாம் பாக்கும்போது மனசு கஷ்டமா இருக்குது' என்று எத்தனையோ முறை சொல்லிப் பார்த்தாள் சாலிஹா.

ஆனாலும் சித்திமாவுக்கு சாலிஹாவைப் பார்க்கும் போதெல்லாம் என்னை விட்டு வேறு வீட்டு மருமகளா போய் விட்டாயே? என்று சொல்வது வாடிக்கையான விஷயம் ஆகிவிட்டது. சின்ன வயதிலே சாலிஹாவை சித்திமா, தன் வீட்டுக்கு அடிக்கடி கூட்டிப் போவாள். பெண் குழந்தைகள் இல்லாததால் சிறு சிறு வேலைகளை வாங்குவாள். சின்ன வயதிலேயே சாலிஹா கருத்தாக வேலை செய்வது, சொன்ன வேலை மட்டு

மல்லாமல் சொல்லாத வேலைகளையும் செய்வது, எல்லோருக்கும் பிடித்துப் போன ஒன்று.

அதுமட்டுமல்லாமல் தமிழில் படிப்பது, எதையாவது எழுதுவது, திருக்குர்ஆன் ஓதுவது, இதெல்லாம் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்துதாக இருந்தது.

திருமணமான புதிதில் சாலிஹாவுக்கும் சல்மானுக்கும் விருந்து வைத்தாள். பீவி யம்மாவோடு புதுமணத் தம்பதிகள் விருந் துக்குச் சென்றார்கள். நன்றாகத்தான் எல்லாம் நடந்தது. வீட்டிற்குப் புறப்படும் நேரத்தில் ஒரு குண்டைத் தூக்கி போட் டாள் சித்திமா.

'நாங்க எங்க புள்ளைக்கு எடுக்க நினைச் சோம். நீ.. எங்க சாலிஹாவைக் கொத்திக் கொண்டு போய்விட்டாயப்பா?' என்றாள்.

பீவி அம்மாவுக்குக் கோபம் வந்து விட்டது. 'என்ன துப்புக்கெட்ட மாதிரி பேசுற' என்று அதட்டினாள்.

'மருமகனே தப்பா நினைக்காதீங்க..! எங்க சாலி எல்லாத்துலயும் பஸ்ட் ஆக்கும். எந்த வேலையும் செய்வா. வீட்டு வேலை செய்வா. எழுதுவா, படிப்பா, பாடுவா பொதுவா எல்லா வேலையும் செய்வா. எங்களுக்குக் கொடுத்து வைக் கல அந்த ஆதங்கத்தில் தான் சொல்றேன். நீங்க தப்பா நினைக்காதீங்க!'

பீவி அம்மா இன்னும் இரண்டு அதட்டு அதட்டினாள். 'வாயை மூடு! தெரியாத அறியாத பிள்ளைகள் மனசுல ஒண்ணு கிடக்க ஒண்ணு சொல்லிக் கொடுத்து மனசுல விஷத்தை வெதச்சி டாதே'

வீடு திரும்பும்போது சல்மானின் முகத்தில் ஈயாடவில்லை. அன்றிரவு சாலி ஹாவிடம் கேட்டான். 'சாலிஹா! இந்தக் கல்யாணத்தில் உனக்கு விருப்பம் இல் லையா?'

(தொடரும்)


# HIJAZ
## LEATHERS PVT. LTD.,

**Tanners & Exporters of**
**Finished Leathers & Fashion Gloves**

**HEAD OFFICE :**
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

**TANNERY :**
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

**GLOVE FACTORY :**
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com


بسم الله الرحمن الرحيم
உங்கள் இல்லங்களிலும், இறை இல்லங்களிலும்
ஓர் இஸ்லாமிய நூலகம்!
புனித ரமலான்
மாதத்தை முன்னிட்டு
அனைத்து நூல்களும் சிறப்பு தள்ளுபடி விலையில்!
94440 25000
95000 57860
*terms & Conditions apply
ரஹ்மத் பதிப்பகம்
இது ஒரு சென்னை ரஹ்மத் அறக்கட்டளை நிறுவனம்
6, இரண்டாவது பிரதான சாலை, சி.ஐ.டி காலனி, மயிலாப்பூர், சென்னை 4
BHIM UPI



# சான்று பகரும் நோன்பு

- அ. அப்துல் சத்தார்

காலி வயிறும்
காய்ந்த உதடுகளும்
ஏந்திய கைகளும்
நின்ற கால்களும்
சாட்சியாகும் நோன்பு நாளில்

வணங்கிய நாள்களும்
வழங்கிய தானமும்
வைகறை ஓதலும்
உச்சரித்த திருப்பெயரும்
நீட்சியாகும் இறுதி நாளில்

பசியின் பகலும்
இரவு வணக்கமும்
ஏழை வரியும்
பாவமன்னிப்பும்
காட்சியாகும் வாழ்நாளில்

கஸ்தூரி வாசமும்
ரய்யான் வாசலும்
இறையின் கூலியும்
நோன்பின் பரிந்துரையும்
மாட்சிமையாகும் தீர்ப்பு நாளில்

தக்பீர் முழக்கமும்
ஈதின் தர்மமும்
உவகையும் உபசரிப்பும்
தொடங்கிடும் பெருநாளில்!

அல்லாஹ்வின் விருந்தாளிகளின் சேவையில் 29வது வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2026 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2025லிருந்து 2026 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

அம்பூர் TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**

B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

**தொடர்பு கொள்வீர்**

சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

# சமரசம் புதிர் போட்டி 4

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை **2026 மார்ச் 05**ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, **73050 40386** என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, **samarasam.article@gmail.com** என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி – G Pay எண் ஆகியவற்றை அனுப்பவும்.

1. ‘ரமளான் மாதம் எத்தகையதென்றால், அம் மாதத்தில்தான் மனிதர்களுக்கு (முழுமையான) வழிகாட்டியாகவும், மேலும் நேர் வழியின் தெளிவான அறிவுரைகளைக் கொண்டதும், சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டக்கூடியதுமான குர்ஆன் இறக்கியருளப்பட்டது. எனவே இனி உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் முழுவதும் நோன்பு நோற்க வேண்டும்’ இந்த வசனம் இடம் பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்

   அ) அல்பகரா ஆ) அல் ஃபுர்கான்

2. ‘ஜிப்ரீல்(அலை) அவர்கள் இரவில் வந்து திருக்குர்ஆனை ஓதிக் காண்பிக்கும் போதும் நபி(ஸல்) அவர்கள் ஓதச் செய்து கேட்கும் போதும் அடுத்த நாள்களில் வேகமாக வீசும் காற்றைப் போல நபி(ஸல்) அவர்களின் கொடை மிக அதிகமாகிவிடும்’ இந்த நபிமொழியை அறிவித்தவர்

   அ) இப்னு அப்பாஸ்(ரலி) ஆ) அனஸ்(ரலி)

3. முஸ்லிம் உம்மத்தின் முதல் முஜத்தித்(மார்க்கத்தைப் புதுப்பிப்பவர்) என்று போற்றப்படுபவர்

   அ) உமர்(ரலி) ஆ) உமர் இப்னு அப்துல் அஸீஸ்(ரஹ்)

4. 2012ஆம் ஆண்டில் மன்னர் பைஸல் விருது பெற்ற உலகக் கோடீஸ்வரர்களில் ஒருவர்

   அ) சுலைமான் அல் ராஜிஹி ஆ) மன்னர் காலித் பின் அப்துல் அஜீஸ் அல் சவுத்

5. இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர்

   அ) ரபி அகமது கித்வாய்
   ஆ) அபுல் கலாம் ஆசாத்

6. நியூயார்க் நகரின் முதல் முஸ்லிம் மேயர்

   அ) எலியா முஹம்மது
   ஆ) ஜோஹ்ரான் மம்தானி

7. கிழக்கின் மகள்(Daughter of the East) யாருடைய சுயசரிதை நூல்

   அ) பெனாசிர் பூட்டோ ஆ) பூலான் தேவி

8. இஸ்ரேலுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த ஃபலஸ்தீன ஹமாஸ் இயக்கத்தின் போராளித் தலைவர்

   அ) ஷஹீத் ஷேக் அஹமது யாசீன்
   ஆ) யாசர் அரஃபாத்

## புதிர் போட்டி இரண்டிற்கான விடைகள்

1. (ஆ) அல்மாயிதா, 2. (அ) ஆயிஷா (ரலி), 3. (ஆ) அபூபக்ர்(ரலி), 4. (அ) பொறுமை, 5. (ஆ) டாக்டர் முஹம்மத் ஹமீதுல்லாஹ், 6. (அ) ஷெய்கா நாசர் அல் ஒவைசி, 7. (அ) ஷஹீத் அபூ உபைதா, 8. (ஆ) வங்காரி மாத்தாய், 9. (அ) நீலகிரி, 10. (ஆ) பின்லாந்து

**சரியான விடையை எழுதியவர்கள்:** H.S.ஹமீது – திட்டக்குடி, பாலா ஆமினத் – சிக்கல், கெய்ஸர் மஸ்ஹருதீன் – வேலூர், வி.எஸ்.சம்சுத்தீன் – கடையநல்லூர், J.T. சாஹீன் பானு – புதுச்சேரி, ஜன்னத்துல் பிர்தௌஸ் – துளசேந்திரபுரம், மு.இஸ்ரத் ரைஹானா – குளச்சல், ஷாஹின்ஷா – திருப்பூர், ந.அனிபா – நாமக்கல்.

**பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:**

வி.எஸ். சம்சுத்தீன், கடையநல்லூர்


# வண்ணம் தீட்டுங்கள்..!













## சித்திரம் பேசுது..!




M.பாய்னா அஸ்லி, புனித ஜோஸப்
ஆங்கிலோ இண்டியன் பெண்கள்
மேல்நிலைப்பள்ளி, திருச்சி



Y. மாஹிரா Grade-3,
சாந்தி நிகேதன் இந்தியன் ஸ்கூல்,
தோஹா, கத்தார்



J. குல்னாஸ் பேகம்,
11ஆம் வகுப்பு, பெண்கள் கிறிஸ்டியன்
மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்

# மக்கள் தேர்தல் அறிக்கை - பத்திரிகையாளர் சந்திப்பு




பிப்ரவரி 06ஆம் நாள் சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு சார்பாக நடத்தப் பட்ட பத்திரிகையாளர் சந்திப்பில் மக்கள் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழக மாநிலத் தலைவர் மௌலவி முஹம்மது ஹனீஃபா மன்பயீ அறிக்கையின் நோக்கம் குறித்துப் பேசும்போது 'மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படையாகத் திகழும் தேர்தல் நீதியான, நேர்மையான முறையில் நடைபெற வேண்டும் என்பதை முதலில் நாங்கள் வலியுறுத்துகின்றோம். வாக்குரிமை என்பது ஜனநாயகக் கடமை. அதை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். எனவே நூறு விழுக்காடு வாக்குச் செலுத்துதல் என்பதைக் குறித்து மக்களிடம் விழிப்பு உணர்வை ஏற்படுத்தி வருகிறோம்.

நாம் உரிமையைப் பெறுவதற்கே இந்தக் கடமையைச் செய்கிறோம். எனவே உரிமையை விற்று விடக் கூடாது. ஓட்டுச் செலுத்த பணம் கொடுப்பது எப்படி குற்றமோ அதுபோல வாங்குவதும் குற்றமே என்பது குறித்தும் நாங்கள் விழிப்பு உணர்வு ஏற்படுத்தி வருகிறோம்.

மக்கள் நல அரசுக்கான அடிப்படைத் தேவைகளை நாங்கள் இந்த அறிக்கையின் மூலம் முன் வைக்கின்றோம். நாங்கள் விரும்புவது விழுமம் சார்ந்த அரசியல். எனவேதான் விழுமம் சார்ந்த அரசியலுக்கான நோக்கங்களை இந்தத் தேர்தல் அறிக்கையில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

இது ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் தேர்தல் அறிக்கை அல்ல. மக்களின் தேர்தல் அறிக்கை. இன்னும் சொல்வதானால் இது முஸ்லிம்களின் கோரிக்கை அல்ல. மக்களின் கனவு, விருப்பம், இலட்சியம், எதிர்பார்ப்பு, திட்டம்தான் இந்த அறிக்கை. நாங்கள் ஒரு குழுவை அமைத்து அந்தக் குழு மக்களைத் துறைவாரியாகச் சந்தித்து, கருத்துகளைக் கேட்டறிந்து, அந்தக் கருத்துகளை ஆய்வு செய்து அந்த அடிப்படையிலே இதனைத் தயாரித்துள்ளோம்.

இது புதிதாக இந்தத் தேர்தலுக்காக மட்டும் தயாரிக்கப்பட்டது அல்ல. ஒவ்வொரு மக்களவை, மாநிலங்களைவைத் தேர்தலின் போதும் இதுபோன்ற மக்கள் தேர்தல் அறிக்கையை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் வெளியிட்டு வருகிறது. வெறுப்பு அரசியல் இங்கு விரட்டியடிக்கப்பட்டு, அன்பும் நல்லிணக்கமும் நிலவ வேண்டும். அதுதான் நம் மாநிலத்தை, நாட்டை வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும்' என்று குறிப்பிட்டார்.

மக்கள் தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்களான ஒழுக்கத்தில் சிறந்த தமிழ்நாடு, நீதியில் சிறந்த தமிழ்நாடு, சமச்சீரான வளர்ச்சியில் தமிழ்நாடு, சுத்தம் போற்றும் தமிழ்நாடு, ஊழல் இல்லாத தமிழ்நாடு, மது, போதை இல்லாத தமிழ்நாடு ஆகியவை குறித்து மாநிலச் செயலாளர்கள் S.N.சிக்கந்தரும், T.அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்வும் விளக்கிக் கூறினர்.

இந்தச் சந்திப்பின் போது மாநிலத் துணைத் தலைவர் யூசுஃப் பாஷா, மாநில அமைப்புச் செயலாளர் K.ஜலாலுத்தீன், மாநில மகளிர் அணிச் செயலாளர் A.ஃபாத்திமா, மாநில ஊடகச் செயலாளர் சாகுல் ஹமீது, மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் வி.எஸ். முஹம்மத் அமீன் ஆகியோர் உடனிருந்தனர்.

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT
# TO PAY & COD
# BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 16 - 28 FEBRUARY 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

- யார் ரமளானில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கிறாரோ அவர்களது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.
- சொர்க்கத்தில் ரய்யான் என்று அழைக்கப்படும் ஒரு வாயில் உள்ளது, அதன் வழியாக மறுமை நாளில் நோன்பாளிகள் மட்டுமே நுழைவார்கள்.
- யார் பொய்யான பேச்சையும் தீய செயல்களையும் விட்டுவிடவில்லையோ, அவர் தனது உணவையும் பானத்தையும் விட்டுவிடுவதில் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையும் இல்லை

– முஹம்மது நபி(ஸல்) அவர்கள்

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35. கதீட்ரல் ரோடு, சென்னை – 600 086.
போன் : (044) 2811 3611


If undelivered, please return to : **Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.**